Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

முரசு - 03 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | தை 10 | புதன்கிழமை (23.01.2013) | பக்கங்கள் 20 | ஓசை - 115

Tilko Jaffna City Hotel
❖ திருமண மண்டபம்
❖ திருமண மண்டப அலங்காரம்
❖ மணப்பெண் அலங்காரம்
❖ திருமண கார் சேவை
❖ Honey moon room
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969











# சம்பந்தன் மீது சங்கரி பாய்ச்சல்



## முளைவிடும் முரண்பாடுகள்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் அங்கத்துவக் கட்சியான தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் முயற்சிகளுக்கு எதிராகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கடும் தொனியில் கண்டனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கும் போது, தமிழரசுக் கட்சியை பலப்படுத்த வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒழிப்பதற்கு சமனாகும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## புனர்வாழ்வு பெற்ற புலிகளுக்கு உதவ யாழ். செயலகத்தில் அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலிகளின் பொருளாதார சமூக மற்றும் நலன்புரி தொடர்பான இணைப்புக்காப்பகம் இன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். செயலகத்தில் உள்ள பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அருகாமையில் பகல் 12.00 மணிக்கு யாழ். அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்துவைப்பார்..

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்தோடு ஒன்றிணைக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## பழிவாங்கும் தாக்குதல்களை இனியும் தொடரவேண்டாம்

### அரசு மீது அமெரிக்கா காட்டம்

(கொழும்பு)

சிவில் சமூக பிரதிநிதிகள் மீதும் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் சட்டத்தின் பாதுகாவலர்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டுவரும் பழிதீர்க்கும் வகையிலான தாக்குதல்களை இனியும் தொடர வேண்டாம் என்று அமெரிக்கா, இலங்கை அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

அண்மைக் காலமாக இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் தமது கருத்துக்களை வெளிப்படுத்திய சிவில் சமூக நிறுவனங்கள், ஆர்வலர்கள் மற்றும் சட்டத்திற்காக குரல் கொடுப்போருக்கு எதிராக தொடர்ந்தும் நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம கரிசனை கொண்டுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

## அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு விரைவான மீள்குடியமர்வு

### இரண்டையும் வலியுறுத்துகிறது இந்தியா

(புதுடில்லி)

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு அர்த்தமுள்ள அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்றும் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் விரைவாக மீள்குடியமர்த்த வேண்டும் என்றும் இந்தியா, இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை - இந்தியாவுக்கு இடையேயான 8 ஆவது இணைப்புக் குழுகூட்டம் நேற்று இந்தியாவின் தலைநகரமான புதுடில்லியில் இடம்பெற்றது. இதில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தின் போது இரு நாடுகளின் பொருளாதார மேம்பாடு, ஏழ்மை போக்குதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அத்துடன், அடுத்த மூன்று ஆண்டுகளில் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வர்த்தகம் செய்ய இரு நாடுகளும் ஒப்பந்தம் செய்துகொண்டன.

19 ஆம் பக்கம் பார்க்க

## சிறிதரன் எம்.பி.யின் அலுவலகத்தில் சோதனை

### எவரும் கைது செய்யப்படவில்லை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் அலுவலகம் நேற்று இரண்டாவது தடவையாகவும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. காலை 9.45 மணிமுதல் சுமார் 3 மணி நேரம் இந்தச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பு பயங்கரவாத குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்ரர் சரத் சந்திர என்பவரது தலைமையில் அறுவர் கொண்ட குழுவொன்றே

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவர்கள் விடுதலை



கைது செய்யப்பட்டு, வெலிகந்த புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரில் இருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று விடுதலை செய்யப்பட்ட மாணவர்கள் இருவரும் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் தலைவர் பவானந்தன் மற்றும் விஞ்ஞான பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவரான சொலமன் ஆகிய இருவருமே இவ்வாறு விடுதலை

19 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் இளைஞர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாற்றில் பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுப் பகல் 11.30 மணியளவில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியரத்தினம் ஜெயகாந்தன் (வயது-25) அம்பாள்நகர், திருவையாறு என்ற முகவரியைச் சேர்ந்தவரே நேற்றுக் கைது செயயப்பட்டுள்ளார். இக் கைது குறித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (77)

## கைது செய்யப்பட்டால் இரு நாட்கள் தடுத்து வைக்கலாம்

### நிறைவேறியது புதிய சட்டம்

கைது செய்யப்படும் சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கும் குற்றவியல் திருத்தச் சட்டத்திற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த 110 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததைத் தொடர்ந்து இச்சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பிடிவிறாந்து ஏதுமின்றி சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்து பின்னர் நீதிமன்றில் ஆஜர் செய்யக் கூடிய வகையில் சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

# முன்மாதிரியான ஒழுக்க செயற்பாடு கூட்டுறவு சங்கங்களுக்கு அவசியம்



(வடமராட்சி)

பனை தென்னை வளம் சார்ந்த அங்கத்தவர்களது நலனுக்காகவே அந்த துறைசார் சங்கம் உள்ளது. எனவே சங்கங்களின் நிர்வாகங்களுக்கு வருகின்ற உறுப்பினர்கள் அர்ப்பணிப்பும் சேவை மனப்பாங்கும் மற்றும் முன் மாதிரியான ஒழுக்கச் செயற்பாடும் அவர்களிடத்தில் காணப்பட வேண்டும் என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினது நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பான கூட்டம் கடந்த 20 ஆம் திகதி முற்பகல் மருதங்கேணியில் உள்ள சங்க மணி மண்டபத்தில் மாவட்ட கூட்டுறவு அலுவலர் ஆர்.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சங்கக் கிளை மட்டத்தில் இருந்து கிளைக்குழுவிற்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். பின்னர் அங்கிருந்து பொதுச்சபை அங்கத்தவர்கள் தெரிவாகின்றனர். அதிலிருந்து இயக்குநர் சபை தெரிவாகிறது. அதிலிருந்துதான் கூட்டுறவுச் சங்கத்திற்கான நிர்வாகம் தெரிவாகின்றது.

நிர்வாகத்திற்கு தெரிவாகின்றவர்கள் கூட்டுறவுச் சட்ட திட்டங்களை அறிந்து வைத்துக் கொள்வதன் மூலம் மிகவும் சிறந்த நிர்வாகத்தை நடத்த முடியும். அதனூடாக அங்கத்தவர்களது நலன் பேணப்படுமென நம்புகின்றேன்.

உடுத்துறைக் கிளையிலிருந்து கிளை முகாமையாளர் வசமுள்ள 1,18,000 ரூபா பணம் அங்கத்தவர்களது உழைப்பு. நிர்வாகத்தில் காணப்பட்ட குறைபாடுகளே காலதாமதமடைவதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

எனவே அதனை ஒரு வார காலத்திற்குள் செலுத்தப்பட வேணடும் என ஆணையாளர் கேட்டுள்ளார். அதனை விரைவில் செலுத்தி நிர்வாகத்தை திறன்பட செயற்படுத்த வேண்டும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 50 இலட்சம் ரூபா செலவில் இக் கட்டடத்தை பனை தென்னை வளம் தொழில் சார்ந்த மக்களுக்காக கட்டிக் கொடுத்துள்ளார். குடாநாட்டில் வடமராட்சி கிழக்கில் மட்டுமே பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு சொந்த நிலையான கட்டடம் உள்ளது என்பதை யாவரும் அறிவீர்கள் எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் பிரதீப், சிறிதரன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மருதங்கேணி பிரதேச இணைப்பாளர் பொன்னுச்சாமி பிறேமதாஸ் (அப்பன்) மற்றும் சங்க அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி ம.வி.யில் இன்று பொங்கல் விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இன்று காலை 8.00 மணிக்கு பொங்கல் விழா இடம்பெறவுள்ளதாக அதிபர் பங்கையற்செல்வன் அறிவித்துள்ளார்.

பாடசாலையில் உள்ள சகல வகுப்புக்களையும் சேர்ந்த 52 பிரிவுகளும் தனித்தனியாக இந்த பொங்கல் விழாவை நடத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் இப்பொங்கல் விழா இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# கண்காட்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயத்தில் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் கண்காட்சி நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் அதிபர் திருமதி க.பரமசாமி கலந்துகொள்கின்றார். இப்பாடசாலைக்கு மதிய உணவு உண்பதற்கு பாடசாலை மாணவர்கள் 100 பேருக்கு உணவுத் தட்டுக்களை வர்த்தக வங்கி உத்தியோகத்தர் ஜி.எம்.எல்.லொயர் அன்பளிப்புச் செய்துள்ளார்.

மேலும் இப்பாடசாலைக்கு ஒருதொகுதி புத்தகங்களை இலவசமாக உவர் லங்கா நிறுவனம் வழங்கியுள்ளது. (31)

# பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் யூன் மாதப் பகுதியில் திருநெல்வேலி செங்குந்தா வீதியில் கத்தியால் வெட்டி ஒருவர் கொலைசெய்யப்பட்ட வழக்கின் சந்தேகநபருக்கு யாழ். மேல் நீதிமன்றம் நேற்று பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த வருடம் யூன் மாதப் பகுதியில் திருநெல்வேலி செங்குந்தா வீதியில் வசிக்கும் புவனேந்திரன் ரஜீவன் என்பவர் கத்தியால் வெட்டி கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்தில் குறித்த நபரை கத்தியால் வெட்டிக் கொலைசெய்த சந்தேகத்தின் பேரில் திருநெல்வேலி கிழக்கு மாரியம்மன் கோவில் பகுதியில் வசிக்கும் பொன்னம்பலம் நல்லநாதன் என்பவர் கோப்பாய் பொலிஸாரினால் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த சந்தேகநபர் சார்பில் நேற்று ஆஜரான சட்டத்தரணி ரி.குணதீபன் மேல்நீதிமன்றத்தில் குறித்த நபரை பிணையில் விடுதலை செய்யுமாறு தமது சமர்ப்பணங்களைச் செய்தார்.

இதனையடுத்து யாழ். மேல் நீதிமன்றம் குறித்த நபரை முப்பது ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் இரண்டு இலட்சம் ரூபா இரண்டு ஆட்பிணையிலும் மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வழக்கில் அரச சட்டத்தரணி கந்தசாமி ஆஜராகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## பங்குத் தந்தைகள் ஒன்றுகூடல்

(ஜெயபுரம்)

வன்னிப் பகுதியில் உள்ள பங்குத் தந்தையர்களுக்கான ஒன்றுகூடல் இன்று காலை 10.00 மணிக்கு ஜெயபுரத்தில் உள்ள அமெரிக்கன் மிஷன் திருச்சபையில் இடம்பெறவுள்ளது.


வன்னிப்பிராந்திய குருமுதல்வர் டி.எஸ்.குகனேஸ்வரன் தலைமையில் நடைபெறும் ஒன்றுகூடலில் 40 வரையான பங்குத் தந்தையர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (149)

# மின் இணைப்பு வேலைகள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் மீள் குடியேறிய பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிகளின் குறுக்கு வீதிகளுக்கான மின் இணைப்பு வேலைகள் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மண்டைதீவுப் பகுதிக்கு மின் இணைப்பு வேலைகள் கடந்த வருடம் இறுதிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதி வழியாக மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்திருப்பதனைத் தொடர்ந்து அந்தக் கிராமத்தின் மக்கள் செறிவாகவுள்ள பல்



வேறு குறுக்கு வீதிகளுக்கும் இந்த மின் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அல்லைப்பிட்டியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்த மின் இணைப்பு வேலைகளில் 95 வீதமான வேலைகள் முற்றுப் பெற்றிருப்பதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் ஒருவர் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இலங்கை மின்சார சபைக்கு மின்சக்தி எரிசக்தி அமைச்சின் அனுமதி கிடைத்ததும் மண்டைதீவுக்கான மின் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதேவேளை அந்தக் கிராமத்தின் மின்சாரம் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ள தமது வீடுகளுக்கான மின் இணைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரியவருகின்றது. (பா)


## மக்கள் வங்கி அறிவித்தல்

**மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2011 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஒரு வருடத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும், 30.06.2012 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஆறு மாதத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும் - 16.03.2013, 17.03.2013 ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

**அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.**

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.** (C/2297)




கெப்ரான் மீடியா ஈஸ்வரராஜாவின் தயாரிப்பில் உருவான 'நோ' குறுந்திரைப்பட வெளியீட்டு நிகழ்வு யாழ். ரீல்கோ ஹோட்டல் மண்டபத்தில் யாழ். திரைப்பட சங்கத் தலைவர் கேசவராஜா தலைமையில் இடம்பெற்றபோது கேசவராஜா தலைமை உரையாற்றுவதையும் முதல் பிரதியை பிரதம அதிதியான ஜனாதிபதியின் வன்னி மாவட்ட இணைப்பாளர் திருமதி கீதாஞ்சலி, ரீல்கோ உரிமையாளர் திலக் திலகராஜாவிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் காணலாம். (105)

# யாழ்.மாவட்ட அபிவிருத்தியில் இந்தியாவின் பங்கு அளப்பரியது

## அரச அதிபர் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் அபிவிருத்தியில் இந்திய அரசின் ஒத்துழைப்பு அளப்பரியது என்று யாழ். அரசஅதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்தியன் வங்கியின் 2 ஆம் ஆண்டு நிறைவையொட்டி வட்டு.வடக்கு கிராமத்தை தெரிவு செய்து அந்தக் கிராமத்தின் அபிவிருத்திக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கடன் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப் புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில், இந்தியன் வங்கியானது 1907 ஆம் ஆண்டு கொழும்பில் அதன் கிளை ஒன்றை தாபித்தது. அங்கிருந்து வியாபார நடவடிக்கைகள் தொழில்சார் நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு கடன்களை வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தது.

இருந்தும் வடமாகாணத்தின் அபிவிருத்திக்கும் வடமாகாண கிராமங்களின் அபிவிருத்திக்குமென யாழ்ப்பாணத்தில் 2011 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில் இந்த இடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதிலிருந்து இந்த வங்கியானது வட்டுமேற்கு கிராம த்தில் ஆரம்பித்திருந்த மாதிரிகிராம அபிவிருத்தித்திட்டத்தில் பயனாளிகள் 99.5 வீதம் கடன்களைத்திருப்பிச் செலுத்தியிருப்பதன் மூலம் அந்தக் கிராமத்தை அபிவிருத்தி செய்வதில் வெற்றி கண்டிருக்கிறது.

அடுத்து வட்டு வடக்கு கிராமத்தை அபிவிருத்தியின்பால் கொண்டுசெல்ல ஆரம்பித்துள்ள திட்டம் தொடர்ந்து வெற்றி பெற தமது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இதன்மூலம் 2015 ஆம் ஆண்டிற்கு முன்பாக இந்த நாட்டில் வறுமைக்கோட்டிற்கு கீழ் எவரும் வாழக்கூடாது என்ற ஜனாதிபதியின் கூற்றுக்கு ஏற்பவே எமது நாட்டின் அபிவிருத்திக்கும் இந்த வங்கி சேவையாற்றி வருவதாகவும் குறிப்பிட்ட அவர், இந்திய அரசாங்கம வடமாகாண அபிவிருத்தியில் காட்டிவரும் ஆர்வம் அளப்பரியது என்று குறிப்பிட்டார்.

வடமாகாணத்தில் 42000 இந்திய வீட்டுத்திட்டம், பளை முதல் காங்கேசன்துறை வரைக்குமான ரயில் பாதை அபிவிருத்தி, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை உருவாக்கம், விவசாய மற்றும் கடற்தொழில் உபகரணங்கள் வழங்கல் என்பன இவற்றில் அடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (பா)

# நிரந்தர ஆங்கில ஆசிரியர் இல்லை; மாணவர்களின் கற்றல் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு ஆங்கில பாடத்திற்கு நிரந்தர ஆசிரியர் இல்லாமையால் மாணவர்கள் அப்பாடத்தை கற்கமுடியாது சிரமங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தின் பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு சொந்த இடத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தரம் 1 முதல் 11வரையான வகுப்புக்களில் 307 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்நிலையில் இப்பாடசாலையில் நிரந்தர ஆங்கில ஆசிரியர் இல்லாமையால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ஆங்கில பாடத்தை கற்கமுடியாத நிலையில் அவர்களுடைய ஆங்கிலபாட அடைவுமட்டம் மிகவும் குறைவாகவே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இனிவரும் காலங்களில் ஆங்கிலபாடம் முக்கியம் பெற்றுவரும் நிலையில் அடிப்படையிலே ஆங்கில அறிவை பெற்றுக்கொள்வதில் ஆசிரியர்கள் இல்லாமையால் மாணவர்கள் பாதிக்கப்படுவதாக பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

புதிய கல்வியாண்டு ஆரம்பமாகி ஒரு மாதம் நிறைவடையவுள்ள நிலையில் இப்பாடசாலை மாணவர்கள் ஆங்கில அறிவை பெற்றுக்கொள்ளும் வகையில் நிரந்தர ஆங்கில ஆசிரி யரை நியமிக்க உரிய அதிகாரிகள் ஆவன செய்யுமாறு மாண வர்களும் பெற்றோர்களும் கேட்டுக்கொள்கின்றனர். (04)

# வீதியின் இருமருங்கிலும் பள்ளம்; விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கள்ளப்பாடு வண்ணாங்குளம் ஊடான சிலாவத்தை செல்லும் சி.எம்.டி வீதி சீமெந்து கற்கள் கொண்டு 2 அடி உயரத்தில் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் வீதியின் இருமருங்கிலும் பள்ளமாக காணப்படுவதால் இவ்வீதியால் பயணத்தை மேற்கொள்ளும் வாகனங்கள் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனா.

கடற்கரையோரத்தை அண்டியிலுள்ள இவ்வீதி முன்னர் சேதமடைந்திருந்த நிலையில் தற்போது சீமெந்தினால் சமதரையாக 2 அடி உயர்த்தி புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வீதியின் இருமருங்கிலும் கிரவல் போடப்படாமையால் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்தி செல்லும போது பள்ளத்தில் விழும் அபாயநிலை காணப்படுவதாக தெரிவிக்கும் மக்கள் இதனால் பாதசாரிகள் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோரும் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே விபத்துக்களை தடுக்கும் வகையில் இவ்வீதியின் இருமருங்கிலும் கிரவல் மணல் போட்டு பரவவேண்டும் எனவும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (04)

# பொங்கல் விழாவும் மாணவர் கௌரவிப்பும்

(அரியாலை)

மண்டைதீவு கிழக்கு உதய சூரியன் சனசமூக நிலையத்தின் பொங்கல் விழாவும் மாணவர் கௌரவிப்பும் அண்மையில் இடம்பெற்றது.

20 வருடங்களின் பின் கடந்த வருட இறுதியில் இந்த சனசமூக நிலையத்தின் நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டு இயங்கி வரும் நிலையில் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்வைபவத்தில் மண்டைதீவு றோ.க வித்தியாலயத்தில் கல்வி பயின்றுவரும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற இரு மாணவிகளுக்கும் மண்டைதீவை சொந்த இடமாகக்கொண்டு யாழ்.நகரப் பாடசாலையில் கல்வி பயின்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 2 மாணவிகளுக்கும் தலா 5 ஆயி ரம் ரூபா ஊக்குவிப்பு தொகையாக வழங்கப்பட்டதுடன் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு நிலையத் தலைவர் தலைமையில் இடம் பெற்றதுடன் கிராமமட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதேவேளை தெற்கே திருவெண் காட்டுசித்திவிநாயகர் ஆலயம் கிழக்கேயுள்ள வேப்பந்திடல் முத்துமாரி அம்மன் ஆலயம் மற்றும் பூமாவடிக் கடற்கரையோரம் அமைந்துள்ள கண்ணகி ஆலயம் ஆகியவற்றிலும் பொது மக்கள் கூடி பொங்கலிட்டு வழிபாடுகளை மேற்கொண்டனர். (23)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அருள்மிகு ஸ்ரீ சாமுண்டீஸ்வரி சமேத ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று புதன் கிழமை காலை 8.06 மணி முதல் 8.32 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இதில் உரும்பிராய் ஞானவைரவர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ செ.வைரவநாதகுருக்கள் கிரியையை ஆற்றவுள்ளார். (பா)

### – யாழ். ஆஸ்பத்திரி வீதியில் –

# பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனங்களுக்கு பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆஸ்பத்திரி வீதிப்பகுதியில் பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனங்களுக்கு மணித்தியாலயத்திற்கு ஏற்றவாறு பணம் அறவிடுவது என யாழ்.மாநகரசபையால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியில் வாகனத் தரிப்பிடம் மற்றும் வடிகால் திருத்தம் தொடர்பான கலந்துரையாடல் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மதியம், 2.30 மணிக்கு இடம்பெற்றது. இக்கலந்துரையாடலிலே மேற்படித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது இதில் வாகனங்கள் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு நேரம் கணிப்பிடப்பட்டது.

வைரவர் கோவில் சந்தியில் இருந்து சத்திரத்து சந்தி வரை காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரைக்கும் அத்துடன் பி.ப.3.00 மணி தொடக்கம் பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனங்களுக்கான அறவீடு ஒரு மணித்தியாலத்திற்கு லொறி, பஸ் என்பவற்றிற்கு 50 ரூபா, கயஸ், படிவாகனங்கள் 20 ரூபா. அத்துடன் இவ் இரு வகை வாகனங்களிற்கும் ஒரு மணித்தியாலத்தை விட ஐந்து நிமிடத்திற்கு மேலாக தரித்து நின்றால் 40 ரூபா அறவிடுவது எனவும், ஆட்டோ, லான் மாஸ்ரர் ஆகிய வாகனங்களிற்கு 10 ரூபா அறவிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மணிக்கூட்டு கோபுர சந்தியில் இருந்து வேம்படி சந்தி வரைக்கும் ஆட்டோ தரிப்பிடம் என தீர்மானிக்கப்பட்டது. வர்த்தக நிலையங்களிற்கு வரும் துவிச்சக்கர• வண்டிகள் மோட்டார் வண்டிகள் நவீன சந்தையில் உள்ள வாகனத் தரிப்பிடத்தினுள் உள்வாங்குவது என தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை வேம்படிச் சந்தியில் இருந்து சத்திரத்து சந்திவரை பாதசாரிகளுக்கான பாதை 6 அடி அகலத்தில் அமைப்பது என தீர்மானிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை ஆணையாளர், உத்தியோகத்தர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபைபணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர், யாழ். பிராந்திய மின் அத்தியட் சகர், வர்த்தக சங்கத் தலைவர், வர்த்தகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.




• அலியன்ஸ் காப்புறுதி கம்பனியின் திருநெல்வேலிக் கிளையின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது கம்பனியின் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் சந்திமால் கெட்டியாராச்சி அலுவலகத்தின் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதனையும், நடன நிகழ்வையும், திறந்து வைக்கப்பட்ட கிளையையும் காணலாம். (படங்கள்: பார்த்தீபன்)

தன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழிநடத்திச் செல்லும். - கன்ஃப்யூஷியஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## குற்றத்திற்குக் காரணங்கள் என்ன?

குற்றச் செயல்கள் அதிகரித்துவிட்டன, கலாசாரம் சீரழிகிறது என்பதைச் சொல்வதில் சில ஊடகங்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் உள்ள குதூகலத்தைப் பார்க்க முடிகிறது. இவர்கள் உணர்ச்சிகரமான பரபரப்புக் கோஷங்களால் பண ஆதாயத்தையும் அரசியல் ஆதாயத்தையும் ஈட்டிக்கொண்டிருப்பது ஒன்று. இவையெல்லாவற்றுக்கும் அரசாங்கமும் மாற்று இனத்தவர்களும்தான் காரணம் என்ற அரச எதிர்ப்பை – இன வெறுப்பை எரியவிட்டுக் குளிர்காயலாம் என்பது மற்றொன்று.

குற்றச் செயல்கள் எங்கும்தான் நடைபெறுகின்றன. அமெரிக்காவிலும், சீனாவிலும், டெல்லியிலும், ஏன் தண்டனைகளால் குற்றத்தைக் குறைத்திருப்பதாகக் கூறிக்கொள்ளும் சவூதி போன்ற நாடுகளிலும் கூட குலைநடுங்க வைக்கக் கூடிய குற்றச் செய்திகள் நாளுக்குநாள் நமக்கு அறியவந்துகொண்டுதான் இருக்கின்றன. நம்மிடம் குடிகொண்டிருக்கும் வன்முறையுணர்வும், நகரமயமாக்கத்தாலும் உலகமய நுகர்வுக் கலாசார விரிவாக்கத்தினாலும் அது பெருக்கப்படுவதும் இந்த குற்றச் செயல்களின் அதிகரிப்புக்குக் காரணம்.

இளைஞர்கள் பெண்களிடம் பாலியல் வன்முறையில் ஈடுபடுவதற்குக் காரணமாக வெறும் உடல் தேவையை மட்டுமே சொல்ல முடியாது. பெண்களைச் சமூகம் எப்படி நடத்துகிறது? எப்படி மதிப்பிடுகிறது? ஆண்களை விட, பெண்களைக் கீழானவர்களாகக் கருதும் மனநிலை உள்ளது. ஓர் ஆண் இரவில் கடற்கரையில் தனியாக இருந்தால், யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள். ஆனால் ஒரு பெண் அப்படி இருக்க முடியாது. இதற்கு என்ன காரணம்?

பெண்ணை சக மனித உயிர் என்பதாகப் பார்க்கும் பார்வை இப்போது இல்லை. வெறும் உடலாகப் பார்க்கும் பார்வையே உள்ளது. இந்த எண்ணத்தை வளர்த்துவிடுவதைப் போல இன்றைய திரைப்படக் காட்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இணையத் தளங்களும் உள்ளன. பெண் என்றால் அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டும். இப்படித்தான் உடுத்த வேண்டும். இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று பெண்களுக்கு என்று தனியான கட்டுப்பாடுகளை விதிக்கும் சமூக மனோபாவம் இருக்கிறது. அது பெண்களைச் சற்றுக் கீழான நிலையில் வைக்கிறது.

அதனால்தான் ஓர் ஆண் எப்படி உடை அணிந்தாலும் பெண்கள் அவர்களைப் பார்ப்பதில்லை. ஆனால் ஒரு பெண் சற்று வித்தியாசமான உடை அணிந்தால் எல்லாரும் பார்க்கிறார்கள். கிண்டல் அடிக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட கருத்துகளை மாற்ற வேண்டும். அதற்கு எல்லோரும் முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் பெண்களின் மீதான பாலியல் வன்முறைத் தாக்குதல்களைக் குறைக்க முடியும்.

திருட்டு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றச் செயல்களிலும் இளைஞர்கள் ஏன் ஈடுபடுகிறார்கள்? அப்படிப்பட்ட குற்றங்களைச் செய்யத் தூண்டும் சமூகக் காரணங்கள் எவை? என்று கண்டறிய வேண்டும். அந்தக் காரணங்களை நீக்க முயற்சி செய்ய வேண்டும்.

சக மனிதனைத் துன்புறுத்தக் கூடாது என்ற எண்ணம் இளம் வயதினரின் மனதில் அழுத்தமாகப் பதியும்படி நாம் அவர்களை வளர்க்க வேண்டும். கற்றுத் தர வேண்டும். மனிதனின் மிருக குணத்தை மனித குணமாக்கும் கலாசார சூழ்நிலையை உருவாக்க வேண்டும். நம் எல்லோருக்குள்ளும் ஒளிந்துள்ள வன்புணர்ச்சியாளர்களைப் பிடுங்கி எறிய நாம் வழிகாண வேண்டும்.

நாம்தான் உயர்ந்த கலாசாரத்தினர். அதை அழிப்பதற்காக்வே மற்றவர்கள் குற்றச்செயல்களைத் தூண்டிவருகிறார்கள் என்று மாயைகளில் பிரலாபிப்பதை விடுத்து, குற்றங்கள் நடைபெறுவதற்கான சமூகக் காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நீக்க முயல்வதே சிறந்தது. - ஆசிரியர்

# அமெரிக்காவைத் திட்டித் தீர்த்துவிட்டு மறுபக்கம் கடன் வாங்கும் அரசு

## திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

குற்றப்பிரேரணை நடவடிக்கை குறித்து அரசாங்கத்தின் உறுப்பினர்கள் அமெரிக்காவை திட்டித்தீர்க்கும் அதேவேளை, அமெரிக்காவிடம் இருந்து டொலர்களை மில்லியன் கணக்கில் கடன்பெறுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இம்முறை பொதுநலவாய நாடுகள் மாநாடு இலங்கையில் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ள போதும் தற்போது கிடைக்கப்பெறும் தகவல்களின்படி பல முக்கிய நாடுகள் இதில் பங்கேற்காது என்ற அச்சம் எழுந்துள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றப்பிரேரணை குறித்த அரசின் நடவடிக்கையால் இந்நிலை ஏற்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கம் சொல்வதொன்று செய்வதொன்று என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக சஜித் பிரேமதாஸவை நியமிப்பதில் சிக்கல் இல்லை என அவர் கூறியுள்ளார்.

இது குறித்து தலைவர் ரணில் விக்ரமசிங்க சஜித் பிரேமதாஸவுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இக்கருத்துக்களை தெரிவித்தார்.

## ஜனாதிபதி நன்கொடை

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் சிரச்சேதம் செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட மூதுரைச் சேர்ந்த இலங்கைப் பணிப்பெண் ரிசானா நபீக்கின் குடும்பத்தாருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 10 இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இதற்கான நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் இடம் பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## அம்பாந்தோட்டையில் முதலீடு செய்ய அமெரிக்கா விருப்பம்

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதியில் உள்ள அம்பாந்தோட்டையில் அமெரிக்கா முதலீடுகளை மேற்கொள்ள விரும்புவதாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதர் மிச்செல் சிஸன் தெரிவித்துள்ளார். இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டம் முன்னணி முதலீட்டு வாய்ப்பை கொண்ட மாவட்டமாக வரும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் அம்பாந்தோட்டையில் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உறவைக் கட்டியெழுப்ப முடியும் என்று தூதுவர் சிஸன் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் தற்போதைய நிலைமை காரணமாக வெளிநாட்டு முதலீடுகளில் பாதிப்பு ஏற்படும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்திருந்தமை யாவரும் அறிந்ததே.

## தவறான தகவல்களை வைத்துக்கொண்டு குற்றச்சாட்டுக்களை சுமத்தும் அமெரிக்கா

தவறான தகவல்களை வைத்துக்கொண்டு அமெரிக்கா, இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அமெரிக்காவின், இராணுவ நிகழ்ச்சித் திட்டம் ஒன்றுக்காக செல்லவிருந்த மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்கவை அமெரிக்கா குறித்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஏற்றுக் கொள்ள மறுத்தது.

இறுதிப் போரின் போது 53 ஆவது படைப்பிரிவில் கட்டளைத தளபதியாக இருந்தார் என் குற்றச்சாட்டை முன்வைத்தே அவருக்கான பயிற்சி அனுமதியை அமெரிக்கா மறுத்திருந்தது. எனினும் மேஜர் ரணசிங்க இறுதிப் போரின்போது 53 ஆவது படையணித் தளபதியாக கடமையாற்றவில்லை. அந்தப் படையணியின் தளபதியாக மேஜர் ஜெனரல் கமல் குணரட்னவே கடமையாற்றினார்.

இந்தநிலையில் தமது இராணுவ பயிற்சித் திட்டத்துக்கு இலங்கையின் இராணுவ அதிகாரி ரணசிங்கவை நட்பு நாடு என்ற வகையில் அமெரிக்கா உள்வாங்காமை தொடர்பில் புரிந்துகொள்ள முடியவில்லை என்று கோத்தாபய குறிப்பிட்டுள்ளார்.

## விமானங்களை சுட்டு வீழ்த்தும் ரவைகள் கண்டுபிடிப்பு

மகிந்தளை - மகிந்தராவ வாவிப் பகுதியில் இருந்து ரவைகள் சில மீட்கப்பட்டுள்ளன. மகிந்தராவ வாவி வழியாக அமைக்கப்பட்டுள்ள அநுரார்தபுரம் - திருகோணமலை பிரதான வீதியின் சிறிய பாலத்திற்கு அருகில் இருந்து இந்த ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.எம்.பி.எம்.ஜு ரவைகள் 1854 மற்றும் ரி-56 ரவைகள் 762 இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட எம்.பி.எம்.ஜு ரவைகள் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவதற்கும் தூர இடங்களை இலக்கு வைப்பதற்கும் பயன்படுத்தக்கூடியது என பொலிஸார் தெரி வித்தனர். குறித்த ரவைகள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இனந்தெரியாத நபர்களால் அங்கு கைவிடப்பட்டு செல்லப்பட் டுள்ளதென பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதேவேளை, குறித்த பகுதியில் இருந்து அண்மையில் எம்.பி.எம்.ஜு ரவைகள், ரி-56 ரவைகள் 2600 கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியீடு

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி வெளியிடப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார தெரிவித்தார். அன்றைய தினம் பரீட்சைகள் திணைக்களத்தின் http://www.doenets.lk/exam என்ற இணையத்தளத்தினூடாக பரீட்சார்த்திகள் தமது பெறுபேறுகளை அறிந்துகொள்ள முடியும். அதேவேளை, அன்றைய தினமே அனைத்து பாடசாலைகளுக்கும் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுமெனவும் பரீட்சைகள் ஆணையாளர் கூறினார்.

2012 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை கடந்த ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெற்றது. இப்பரீட்சையில் இரண்டு இலட்சத்து 20 ஆயிரத்து 535 பாடசாலை பரீட்சார்த்திகளும் 15 ஆயிரத்து 239 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றினர். இவர்களில் பழைய மற்றும் புதிய பாடத் திட்டங்களுக்கமைய இரு சாராருக்கும் வெவ்வேறு பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொடர்ச்சியாக 100 நாட்களுக்கு மேற்கொண்டிருந்த பணி பகிஷ்கரிப்பின் காரணமாக பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் காலதாமதமாயின.

இருப்பினும் கல்வியமைச்சரினதும் பரீட்சைகள் ஆணையாளரினதும் வேண்டுகோளுக்கிணங்க விடைத்தாள் திருத்தும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு மூன்று கட்டங்களில் அவை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து**

# மலையகத் தமிழர்களின் சனத்தொகை குறைவடைந்து காணப்படுவது ஏன்?

பொய்கள், மட்டமான பொய்கள், இவைதான் புள்ளிவிபரங்கள் - என்று ஒரு பழமொழி உண்டு. இலங்கையில் குடிசன மதிப்பை மேற்கொண்ட அலுவலர்கள், பத்தாண்டுகளுக்கு ஒரு முறை தேசிய மக்கள் தொகையை கணக்கிடும் மிகவும் கடினமான பணியை, அதுவும் குறிப்பாக யுத்தத்துக்கு பிந்திய காலப் பகுதியில் மிகவும் சிறப்பாக மேற்கொண்டதுக்காக பாராட்டப்பட வேண்டியவர்கள். ஆனால் இந்த நடவடிக்கையில் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் புள்ளிவிபரங்கள், பதில்களை விட அதிகம் கேள்விகளையே எழுப்புகின்றன. அல்லது அப்படித் தோற்றமளிக்கிறது.

2011ஆம் ஆண்டின் குடிசன மதிப்பு புள்ளிவிபரங்கள் பல காரணங்களுக்காக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. 1981இற்கு பின்னர் முதல் தடவையாக நடத்தப்பட்ட கணக்கெடுப்பு நாடளாவிய ஒரு விவகாரமாக கருதப்பட்டது, ஏனெனில் போரின் தலையீடுகள் உள்ள வருடங்களில் அதன் விளைவாக ஏற்பட்ட மரணங்கள் மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்ட புலம்பெயர்வுகள், அதற்கான முக்கிய காரணம். இன்று, குறிப்பிட்ட சமூகங்கள் மற்றும் தனித்துவமான இனங்கள் போன்றவற்றுக்கு அரசாங்கம் நடத்தும் அபிவிருத்தி திட்டங்கள் சம அடிப்படையில் சென்று சேரவில்லை என்பதை அரசாங்கம் குறித்துக் கொள்ளவேண்டும் என்று சனத்தொகை எண்ணிக்கையும் மற்றும் அதன் வளர்ச்சி விகிதமும் பெருமளவில் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த சனத்தொகை கணக்கெடுப்பு, சிலவற்றை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த தசாப்தங்கள் மற்றும் வருடங்கள் முழுவதிலும், நாட்டிலுள்ள முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி, சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் வளர்ச்சி நிலையைக் காட்டிலும் மிக மிக உயர்வாக உள்ளது. உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின் படி 1981 மற்றும் 2011 இற்கு இடைப்பட்ட 30 வருட காலத்தில், நாட்டில் உள்ள முஸ்லிம்களின் சனத்தொகையின் வளர்ச்சி விகிதம் மிகவும் உயர்வான 76.4 விகிதமாகும் - 1,046,900 என்கிற எண்ணிக்கையிலிருந்து 1,869,800 ஆக உயர்ந்துள்ளது. இது 38 விகித அதிகரிப்பான சிங்களவர்களின் சனத்தொகையுடன் ஒப்பிடும் போது இரு மடங்காக உள்ளது.

கடந்த 30 வருடங்களில் கொழும்பில் சனத்தொகை பெருக்கம் முறையே சிங்களவர்கள் 34.3 விகிதமாக உயர்ந்துள்ள அதேவேளை, அதற்கு எதிராக முஸ்லிம்களின் சனத்தொகை விகிதம் அதி உயர்ந்ததாக 73.7 விகிதத்தால் உயர்ந்து உள்ளது, இலங்கை தமிழர்களின் சனத்தொகை அதிகரிப்பு (வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள யுத்த நெருக்கடி காரணமாக), 35.5 விகிதத்தால் அதிகரித்து உள்ளது மற்றும் மலையகத் தமிழர்களின் அல்லது இந்திய வம்சாவளித் தமிழர்களின் சனத்தொகை 37.7 விகிதத்தால் உயர்ந்துள்ளது. இதில் மற்றொரு விடயமாக அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு சம்பந்தமான சனத்தொகை அடிப்படையான விவாதங்களில் எவ்வாறு இலங்கைத் தமிழர்கள் ஒருகாலத்தில் யுத்த வலயமாக இருந்த இடத்தைக் காட்டிலும் அதற்கு வெளியே அதிக அளவில் வாழ்ந்து வருகிறார்கள் எனச் சுட்டிக்காட்டி வருகிறது.

முஸ்லிம்களுக்கும் மற்றும் சிங்களவர்களுக்கும் அப்பால் இலங்கைத் தமிழர்களின் சனத்தொகை, மரணங்கள், வெளிநாட்டு புலம் பெயர்தல் உட்பட்ட நிரந்தர இடப்பெயர்வுகள் காரணமாக பெரிதும் பாதிப்படைந்துள்ளது. மற்றவைகளுடன் ஒப்பிடும்போது கணிசமான அளவில் 20.3 விகிதமே அதிகரித்துள்ளது. இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களைக் கணக்கெடுப்பு நடத்தியதில் கடந்த 30 வருடங்களில் 1,886,900 என்பதிலிருந்து 2,270,900 ஆகவே உயர்ந்துள்ளது. இலங்கை தமிழ் கலாசாரத்தின் கோட்டையாக திகழ்வதும் மற்றும் சமூகம் சார்ந்த அரசியலை இயக்குவதுமான, யாழ்ப்பாணத்தை பார்த்தால், அது தொடர்ந்தும் நாட்டில் சன்த்தொகை அதிகம் செறிந்து வாழும் இடங்களில் ஒன்றாகவே இருந்து வருகிறது (1981 இல் கொழும்புக்கு அடுத்து இருந்த இரண்டாம் இடத்தை அது தவறவிட்டிருந்த போதும்கூட). போரினால் சீரழிந்த வடமாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்கள், மிகவும் குறைந்த சனத்தொகை அடர்த்தியுள்ளனவற்றில் சிலவாகவே உள்ளன. இதேபோல அவை இன்னமும் பல தசாப்தங்களுக்கு அல்லது வரும் நூற்றாண்டு வரும்வரையில் இருந்துகொண்டே இருக்கும்.

மலையகத் தமிழர்களைப் பொறுத்த மட்டில் அதில் ஒரு ஆழ்ந்த மர்மம் சூழ்ந்துள்ளது, ஒரு 30 வருடகாலத்தில் அவர்களது சனத்தொகைப் பெருக்கம் மிகவும் வருந்தத்தக்க அளவில் மிகவும் சிறிய அளவான 2.8 விகிதத்தாலேயே அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கையானது சகல வழிகளினாலும் போரினால் பாதிக்கப்பட்டு, குறிப்பாக சனப்பெருக்கத்துக்கு காரணமான வயதுள்ள, ஆண்களும் மற்றும் பெண்களும் மரணத்தையும் இடப்பெயர்வையும் (வெளிநாடுகளுக்கும்கூட) சந்தித்த இலங்கை தமிழர்களைக் காட்டிலும் 10 மடங்கு சிறியது.

இதன்படி மலையகத் தமிழர்களின் சனத்தொகை 812,700 இலிருந்து 842,300 ஆக கடந்த முப்பது வருடங்களில் உயர்ந்துள்ளது. உண்மையில், இந்தச் சமூகம் அநேக எண்ணிக்கையிலானவர்களை, 1964ஆம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ குடிபெயர்வு காரணமாக இந்தியாவுக்கு அனுப்பியதன்மூலம் இழந்திருக்கிறது.



இன்னும் அநேகமானவர்கள் நாற்பதுகளின் பிற்பகுதியில் உருவான சட்டத்தின் பிரகாரம் அன்று முதல் பல தசாப்தங்களாக பிரஜா உரிமையற்றவர்களாகவே இருந்து வந்தார்கள். இருந்தாலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அரசாங்கங்கள் அந்த நாதியற்றவர்களுக்கு பிரஜா உரிமைகள் வழங்கி மேலும் அனைத்தையும் உள்ளடக்கிய சமூகமாக அவர்களை உள்வாங்கும் முயற்சிகளை ஆரம்பித்து வைத்தன.

ஆனால் எழுப்பப்படும் கேள்வி என்னவென்றால், இந்தியத் தமிழர்களின் (சனத்தொகை படிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி) சனத்தொகையின் எண்ணிக்கை, இன்னமும் யதார்த்த கள நிலைமையில் உள்ளதைத்தான் பிரதிபலிக்கிறதா? என்பதுதான். அது அப்படியானால்? அது ஏன்? கேள்விகள் இலகுவாக இருந்தாலும் அவற்றுக்கான பதில்கள் சிக்கலானவை. இங்கு புள்ளிவிபரங்கள் இதற்கான பதிலை வழங்கக்கூடிய நிலையில் இல்லை. இங்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றுக்காக குறிப்பிடத்தக்க அளவிலானவர்கள் குடிபெயர்ந்துள்ளார்கள், அந்த எண்ணிக்கை நியாயமாகவும் மற்றும் சரியாகவும் பரிசீலிக்கப்பட வேண்டும். இங்கு குடிசன மதிப்பு புள்ளிவிபரங்கள் தயாராக உள்ள விடைகளை வழங்க முடியாது. இதற்கு சமூகவியல் கற்கைகள் மட்டுமே உதவ முடியும். அவைகள் பின்பற்றப்பட வேண்டும்.

இல்லையேல் ஐம்பதுகளில் நாடற்ற நிலையிலிருந்த இந்தியத் தமிழர்கள் தற்பொழுது தங்களை இலங்கைத் தமிழர்கள் என்று பதிவு செய்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது, ஏனென்றால் தாங்கள், தங்கள் முன்னோர்களின் தாய் நாடானதும், ஆனால் தற்போது இங்கு இருக்கும் அந்த நாளைய இளைய தலைமுறையினருக்கு இன்னமும் ஒரு அன்னிய தேசமாக உள்ள இந்தியாவுக்கு நாடுகடத்தப் படுவதை தவிர்ப்பதற்காகவும் அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம்.

இருந்தாலும் அது இத்துடன் முடிந்துவிடவில்லை. இந்தியத் தமிழர்களை ஆரம்பத்திலிருந்தே நாடற்றவர்கள் மற்றும் வாக்குரிமையற்றவர்கள் என்ற நிலைக்குத் தள்ள, சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே அரசாங்கங்கள் திட்டமிட்டு செயற்பட்டதால், சிலர் தாங்கள் பிரதானமாக வாழ்ந்த மலைப் பிரதேசமான மத்திய மாகாணத்தை விட்டு, ஒரு காலத்தில் சன அடர்த்தி குறைவாக இருந்த வட மாகாணத்தின் வன்னிப் பகுதியில் குடியேறினார்கள். தமிழர் எதிர்ப்பு கலவரங்கள், மலையகத் தமிழர்களையும் விட்டு வைக்காதபடியால், வன்னிப்பகுதியை நோக்கி இடைப்பட்ட தசாப்தங்களில் அவர்கள் பெருமளவில் குடிபெயர அதுவே முக்கிய காரணமாயிற்று.

இன்னமும் தெளிவற்ற ஒரு விடயமாக இருப்பது, வன்னிப் பகுதியில் நடந்து முடிந்த நான்காம் ஈழப் போரில், வன்னியில் மீள்குடியேறிய எத்தனை மலையகத் தமிழர்கள் தங்கள் இன்னுயிர்களை இழந்தார்கள் என்பதுதான். அவர்கள் தங்கள் உண்மையான அடையாளங்களை அல்லது இழப்புகளின் எண்ணிக்கையை ஏற்க வெட்கப்பட்டு விலகிச் செல்வதாகத் தெரிகிறது. இலங்கைத் தமிழர்கள்கூட இதை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்றுதான் தோன்றுகிறது.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காக மேலும் மேலும் போராட்டம் நடத்தினார்கள். அதன் பெயரால் போராடிய அவர்களில் பலருக்கு அதன் அர்த்தம், வழிகள் அல்லது முதற்கட்டமாக அந்த உரிமைகளை பயிற்சி செய்து பார்ப்பதற்கான சாத்தியமான தேவைகள் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை. ஆனால் இந்தியத் தமிழர்களோ தாங்கள் உயிர்வாழ்வதற்காக போராடினார்கள். முதலில் ஒரு மனிதப் பிறவியாகவும், பின்னர் ஒரு இலங்கை பிரஜையாகவும் மதிக்கப்பட வேண்டி அவர்கள் போராடினார்கள். இன்னும் சொல்வதானால் அவர்கள் இன்னமும் அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதை இன்னமும் கைவிட்டு விடவில்லை.

இந்தப் புள்ளிவிபரங்கள் இதன்படி, இன்னமும் எங்களுக்கு ஒரு கதையைத்தான் சொல்கிறது, அவை சொல்லவேண்டியதைவிட அதிகமானவற்றை மறைக்கிறது. அவை மறைப்பதைவிட அதிகமானவற்றை வெளியே சொல்கின்றன.

> **இன்னமும் தெளிவற்ற ஒரு விடயமாக இருப்பது, வன்னிப் பகுதியில் நடந்து முடிந்த நான்காம் ஈழப் போரில், வன்னியில் மீள்குடியேறிய எத்தனை மலையகத் தமிழர்கள் தங்கள் இன்னுயிர்களை இழந்தார்கள் என்பதுதான். அவர்கள் தங்கள் உண்மையான அடையாளங்களை அல்லது இழப்புகளின் எண்ணிக்கையை ஏற்க வெட்கப்பட்டு விலகிச் செல்வதாக தெரிகிறது. இலங்கைத் தமிழர்கள்கூட இதை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்றுதான் தோன்றுகிறது.**

# குற்றவியல் சட்டத் திருத்த யோசனை மற்றுமொரு அடக்குமுறை சட்டமாகும்



(கொழும்பு)

குற்றவியல் சட்டத் திருத்த யோசனையானது மற்றுமொரு அடக்குமுறைச் சட்டமாக கருதப்பட வேண்டுமென ஜே.வி.பி. கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய பொலிசாருக்கு அனுமதியளிக்கும் வகையில் குற்றவியல் சட்டம் திருத்தியமைக்கப்பட உள்ளது.

இந்தச் சட்டம் நல்லாட்சி குறித்த எண்ணக்கருக்களுக்கு புறம்பானது. புதிய சட்டத் திருத்தத்தின் ஊடாக சட்ட மா அதிபருக்கும், பொலிஸாருக்கும் அதீத அதிகாரங்கள் வழங்கப்படும் என ஜே.வி.பி பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் அரசியல் நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் இந்த சட்டத் திருத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து சித்திரவதை செய்ய பொலிசாருக்கு அனுமதி வழங்கும் வகையில் இந்தச் சட்டத் திருத்தம் அமைந்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிரான மாற்றுக் கருத்துக்களை முன்வைக்கும் தரப்பினரை ஒடுக்கும் நோக்கில் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல - பெலவத்தையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# ஜப்பானின் உதவி தொடர்ந்தும் கிடைக்கும்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜப்பான் அரசு தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தடங்கல் ஏற்படாத வகையில் ஜப்பான் அரசு ஆதரவு வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் திவிநெகும தேசிய வேலைத்திட்டம் வெற்றிப் பாதையில் செல்வதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் இதன்போது ஜப்பான் வெளிவிவகார அமைச்சருக்கு தெரிவித்துள்ளார்.

# அரசின் ஆட்சிக்காலத்திற்கு ஆயுள் குறிக்கிறார் ரணில்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் 2014 வரையிலேயே நீடிக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தொடங்கஸ்லந்த பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பிஸ்கட் பக்கட் ஒன்றை எடுத்துக் கொண்டால் அதில் கலாவதியாகும் திகதி காணப்படும்.அதேபோன்று இந்த அரசாங்கம் கலாவதியாகும் திகதி அடுத்த ஆண்டாகும்.

அரசாங்கத்தின் நிர்வாக சீர்கேடே மரக்கறி மற்றும் உணவுப் பொருட்களுக்கான விலை உயர்விற்கு காரணம். கத்தரிக்காய் ஒரு கிலோ 300 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

டிசம்பர் ஜனவரி மாதத்தில் நாட்டில் நிலவும் காலநிலையை கருத்திற் கொண்டு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதனை தீர்மானித்திருக்க வேண்டும்.

அரசாங்கத்தின் மீதான எதிர்பலை வலுப்பெற்று வருகின்றது. நாட்டின் கல்வித்துறை சிரியாவைப் போன்றும், சுகாதாரத்துறை லிபியாவைப் போன்றும் மாறியுள்ளது என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

# நாட்டின் அரைவாசி சனத்தொகையை நீரிழிவு நோய் தாக்கும் அபாயம்



(கொழும்பு)

2050 ஆம் ஆண்டளவில் நாட்டின் சனத்தொகையில் அரை வாசிப்பேர் நீரழிவு நோயின் பாதிப்பை எதிர்நோக்கக் கூடிய அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை நீரழிவு அல்லாத தொற்றா நோய்களும் தற்போது நாட்டிற்கு பெரிய சவாலாக அமைந்துள்ளதென அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. தற்போது 10-15 வீதமான பாடசாலை மாணவர்கள் நீரழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தொற்றா நோய்களின் காரணமாக நாள் ஒன்றிற்கு 650 பேர் மரணமடைவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தொற்றா நோய் தடுப்பு வருடமாக இவ்வருடம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

# தப்பிச் சென்ற ஈரான் கப்பலை மீண்டும் கொண்டுவர முயற்சி

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தப்பிச் சென்ற ஈரான் கொடியுடனான கப்பலை மீண்டும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வெளிவிவகார அமைச்சின் ஊடாக ஈரானுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக கப்பல் பணிப்பாளர் அஜித் செனவிரத்ன தெரிவிக்கின்றார்.

காலி துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நங்கூரமிடப்பட்டிருந்த இந்த கப்பல் கடந்த 17 ஆம் திகதி புறப்பட்டு சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மனிய வங்கியொன்றுக்கு பணம் செலுத்தாத குற்றச்சாட்டின் கீழ் இலங்கை வணிக நீதிமன்ற உத்தரவிற்கு அமைய இந்தக் கப்பல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கப்பலை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக கப்பல் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சட்டத்தரணிகள் மீதான அச்சுறுத்தல்கள் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்

## பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம்

(கொழும்பு)

சட்டத்தரணிகள் மீதான அச்சுறுத்தல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை என பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

தேசப்பற்றுடைய அதிரடிப்படை என்ற பெயரிலான அமைப்பொன்று சட்டத்தரணிகள் மீது அச்சுறுத்தல்களை விடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கும் தரப்பினருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டமை, நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் முயற்சி எடுக்காமை போன்றன. அதி உயர் பதவிகளை வகிப்போர், இந்தத் தாக்குதல்களுக்கு ஆதரவளித்தார்களா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

சட்டத்தரணிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீது விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் கொலை மிரட்டல்கள் தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்திற்கு ஆதரவு, தேசப்பற்று போன்ற பெயர்களில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

நாட்டில் சிவில் வன்முறைகள் வெடிப்பதற்கு இடமளிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளது.

மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை மற்றும் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தல் ஆகிய காரணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயற்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

அச்சுறுத்தல்கள் வன்முறைகள் தொடர்பில் ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் மௌனம் காத்து வருகின்றமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# அமெரிக்காவின் நெருக்கடிக்கு சீனாவுடன் இணைந்து பதிலடி

## சீறுகிறது தேசிய சுதந்திர முன்னணி

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் தலையிட்டு அமெரிக்கா நெருக்கடிகளைக் கொடுக்க முன்வந்தால் சீனாவுடன் இணைந்து தக்க பதிலடி கொடுக்கப்படுமென தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

புலிகளின் இலக்குகளை இலங்கையில் நிறைவேற்ற அமெரிக்கா கடுமையாகச் சூழ்ச்சிகளை செய்து வருகின்றது.

தொடர்ந்தும் அவ்வாறான தொரு சூழலை இலங்கையில் உருவாக்க இந்நாட்டு மக்கள் இடமளிக்கமாட்டார்கள் என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து தேசிய சுதந்திரமுன்னணியின் பேச்சாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான பியசிறி விஜேநாயக்க கூறுகையில்,

இலங்கையைச் சிதைப்பதே அமெரிக்காவின் திட்டம். இதற்கு இடமளிக்கப் போவதில்லை.

கடந்த பல வருட காலமாக விடுதலைப்புலிகளின் வலையமைப்புடன் இணைந்து இலங்கைக்கு எதிரான நடவடிக்கைளையே அமெரிக்கா தொடர்ந்து முன்னெடுத்தது.

குறிப்பாக ஐநாவிலும் இலங்கையைத் தலைகுனிய வைக்கவே அமெரிக்கா செயற்பட்டது.

இனிமேலும் இலங்கையை அடிமைப்படுத்தவோ நெருக்கடிகளைக் கொடுக்கவோ முற்பட்டாலோ கடும் நடவடிக்கைகளையே முன்னெடுப்போம்.

சீனாவுடன் இலங்கைக்கு நல்ல நட்புறவு உள்ளது. எனவே அமெரிக்காவின் சவால்களை சீனாவுடன் இணைந்து இலங்கை முறியடிக்கும்.

அடுத்த வாரத்தில் இலங்கை வரவுள்ள மூன்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர்களும் உள்நாட்டு விடயங்களில் தலையிடக் கூடாது. மீறிச் செயற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்றார்.

# அமைப்பாளர் பதவி பசிலுக்கு வழங்கக் கோரிக்கை



(கொழும்பு)

களனி தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்து மேர்வின் சில்வா நீக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என களனி பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள விசேட கடிதத்தில், பசில் ராஜபக்ஷவிற்கு இந்தப் பதவியை வழங்குமாறு கோரியுள்ளனர்.

களனி பிரதேச சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு மதத் தலைவர்களும் ஆதரவளித்துள்ளனர்.

இந்தக் கோரிக்கைகளின் பிரதிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவை

(மானிப்பாய்)

மானிப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆனைக்கோட்டை - காக்கைதீவுப் பகுதியில் இலவச நடமாடும் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது.

காக்கைதீவு சந்திக்கு அண்மையில் இடம்பெறும் இந்நடமாடும் சேவையில் திருமண, பிறப்பு, இறப்பு பதிவுகள் மேற்கொள்ளாதவர்களின் பதிவுகளைப் பதிவு செய்தல், சாரதி அனுமதிப்பத்திரம், அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்களுக்கான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு, பதிவுப் பிரதிகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் ஏனைய பொதுவான முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல் போன்ற சேவைகள் இடம்பெறவுள்ளது.

இதில் கிராம சேவகர், பிறப்பு இறப்பு பதிவாளர், பொலிஸ் உயர் அதிகாரிகள் போன்றோர் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் இங்கே கலந்து கொள்ளும் பொதுமக்கள் பொலிஸாரின் இச்சேவை வழங்குவது தொடர்பாக தமது ஆலோசனைகளையும் தெரிவிக்கமுடியும். மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி மல்கம் பிளேட் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளார். (54)

## குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்த மக்களின் ஒத்துழைப்பு அவசியமானது

(வேலணை)



தீவகத்தின் அனைத்துப் பகுதியிலும் தொடர்ந்து இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மக்களின் பூரண ஒத்துழைப்பு மிக அவசியமானது என வேலணை பிரதேசசபை தவிசாளரும் ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச இணைப்பாளருமான சி.சிவராசா (போல்) தெரிவித்தார்.

வேலணையில் ஜே/12 கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழு விழிப்புணர்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவகப்பகுதியில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது.

அண்மையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையநபர்களைக் கைது செய்வதற்குப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்போது முயற்சி செய்து வருகின்றனர். அதற்கு மக்களாகிய உங்களின் ஒத்துழைப்பினை வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் மக்கள் எந்நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டும். இப் பகுதியில் குற்றச் செயல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. அதனை உடன் நிறுத்தி மக்களின் அன்றாட செயற்பாடுகளுக்கு வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இக் கூட்டத்தில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் அத்தியட்சகர் வீரசிங்க, அப் பகுதி கிராம அலுவலர், பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் அப் பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



பாழ்.ஒஸ்மானியாக் கல்லூரிக்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்ட கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியுதீன் பாடசாலையின் கட்டட நிர்மாணப் பணிகளைப் பார்வையிட்டு கல்லூரி அதிபர், உலாமக்கள் உடன் கலந்துரையாடுவதைக் காணலாம். (105)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்

தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 24. 01. 2013

- ரிஷானாவின் மரணம் ஒரு ஆழமான பார்வை!
- உணர்வுகளின் வெளிப்பாடு!
- கடலில் சங்கமமான கப்பல்கள் காட்டிக் கொடுத்தது அமெரிக்கா!
- மொட்டை சீமானின் வெட்டிப் பேச்சுக்கள்!
- மட்டக்களப்பில் குழப்பத்துக்கு வித்திடுகிறதா எல்லை நிர்ணயக்குழு!




உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!



முக்கியத்துவம் பொருந்துமா?

சூடு - சுவை - சுவாரசியம் இதுதான் தினமுரசு

# ருவென்ரி–20 அணியில் மார்ஷ்



(சிட்னி)

இலங்கைக்கு எதிரான ருவென்ரி–20 போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் ஷோன் மார்ஷ் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலியா சென்றுள்ள இலங்கை அணி 2 ருவென்ரி–20 போட்டிகளில் பங்கேற்கிறது.

முதல் ருவென்ரி–20 சிட்னியில் எதிர்வரும் 26 இல் நடக்கிறது. இரண்டாவது போட்டி 28 மெல்போர்னில் நடக்கிறது. இதற்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டது. இதில் பிக் –போஷ் தொடரில் அசத்திய ஷோன் மார்ஷ் (412 ஓட்டங்கள்) இடம்பிடித்தார். இவரது வரவு அணிக்கு பெரும் பலம் என கப்டன் பெய்லி தெரிவித்தார்.

அணி விவரம்: ஜோர்ஜ் பெய்லி (கப்டன்), பென் கட்டிங், தோகர்டி, ஜேம்ஸ் பால்க்னர், ஆரோன் பின்ச், பென் லாக்லின், ஷோன் மார்ஷ், மேக்ஸ்வெல், மிட்சல் ஸ்டார்க், ஆடம் வோக்ஸ், வேட், வோர்னர்.

# அரையிறுதியில் ஷரபோவா, லினா

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டிக்கு சீன வீராங்கனை லிநா மற்றும் ரஷ்யாவின் மரியா ஷரபோவா ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் மெல்போர்ன் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற மகளிருக்கான காலிறுதிப்போட்டியில் சீனாவின் லி நா, போலந்து நாட்டு வீராங்கனை அக்னீஸ்கா ரத்வன்ஸ்காவை எதிர்கொண்டார். முதல் செட்டில் சீனாவின் லிநாவிற்கு அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா நெருக்கடி கொடுத்தார். இருந்த போதும் லிநா அபாரமாக முதல் செட்டை 7-5 என்ற கணக்கில் கைப்பற்றினார். இந்நிலையில் இரண்டாவது செட்டை ரத்வன்ஸ்கா தனதாக்குவார் என்றுஎதிர்ப்பார்க்கப்பட்ட வேளையில் இதிலும் லிநாவின் கையே ஓங்கியது. இரண்டாவது செட்டை லிநாவிடம் 6-3 என்ற கணக்கில் பறிகொடுத்து ரத்வன்ஸ்கா போட்டியில் இருந்துவெளியேறினார். வெற்றி பெற்ற லிநா அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார். தொடர்ந்துநடைபெற்ற மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் ஷரபோவா வெற்றிபெற்றார். இதில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, மற்றொரு ரஷ்யா வீராங்கனை மகாரோவாவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் ஷரபோவாவுக்கு, மகாரோவா கடும் நெருக்கடி கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஷரபோவா எளிதில் 6-2, 6-2 என்ற செட் கணக்கில் மகாரோவாவை வீழ்த்தி அரையிறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளார். கடந்த ஆண்டும் மகாரோவா காலிறுதி போட்டியில் மரிய ஷரபோவால் வீழ்த்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆஸி. பரிகாரம்

CRICKET
AUSTRALIA

(மெல்போர்ன்)

சிட்னி போட்டி கைவிடப்பட்டதால் இரசிகர்களுக்கு ஒரு ருவென்ரி–20 போட்டிக்கான நுழைவுச் சீட்டு இலவசமாக வழங்கப்படும் என அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை (சி.ஏ.) தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலிய, இலங்கை அணிகள் மோதிய நான்காவது ஒருநாள் போட்டி மழை காரண–மாக பாதியில் இரத்தானது. இதனிடையே, எதிர்வரும் 26 மற்றும் 28ஆம் திகதிகளில் சிட்னி, மெல்போர்னில் இலங்கைக்கு எதிராக இரண்டு ருவென்ரி–20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதில் சிட்னியின் நடைபெறும் போட்டிக்கு இரசிகர்களுக்கு இலவசமாக நுழைவுச் சீட்டை வழங்க அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. இது குறித்து கிரிக்கெட் சபையின் பொதுமுகாமையாளர் மைக் மெக்கன்னா கூறுகையில், மழை காரணமாக போட்டி பாதிக்கப்பட்டது துரதிர்ஷ்டவசமானது. போட்டி இரத்து செய்யப்படும் வரை, இரசிகர்கள் உற்மாகமாக கண்டுகளித்தனர். இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். இதனால், இப்போட்டிக்கு வந்த இரசிகர்களுக்கு, சிட்னி ருவென்ரி–20 போட்டிக்குரிய நுழைவுச் சீட்டு இலவசமாக வழங்கப்படும். இதை இ–மெயில் மூலம் மட்டும் தான் பெறவேண்டும் என்றார்.

# பந்து வீச்சாளர்கள் ஜொலித்தால் பதம் பார்க்க முடியும் இன்று இந்தியாவை

(மொகாலி)

இங்கிலாந்தில் நிலவுவதைப் போல குளிரான சூழ்நிலைதான் இங்கும் உள்ளது. இதைப் பயன்படுத்தி பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டால் இன்றைய போட்டியில் இந்திய அணியை வெற்றி கொள்ள முடியும் என இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இயன் பெல் தெரிவித்தார்.

போட்டிகளில் வெல்வது அல்லது தோற்பது என எதுவாக இருந்தாலும், முடிந்தவரை சிறப்பாகச் செயற்பட வேண்டும். கொச்சி மற்றும் ரஞ்சியில் நடந்த போட்டிகளில் எங்களது செயற்பாடு ஏமாற்றம் தந்தது. இந்திய அணிக்கு சவால் விடும் வகையில் நாங்கள் விளையாடவில்லை.




ஒருவேளை சூழ்நிலை எங்களுக்கு பொருந்தாமல் இருந்திருக்கலாம். முதல் இரு போட்டிகள் நடந்த இடங்களைவிட மொகாலியில் உள்ள சூழ்நிலை, இங்கிலாந்தில் இருப்பதைபோல உள்ளது. சிறிய இளங்காற்று வீசுவதால், எங்களது புந்துவீச்சாளர்களுக்குச் சாதகமாக இருக்கும்.

இதனால், ராஜ்கோட்டில் வென்றதைப் போல, இங்கும் வெற்றி பெற்று தொடரை 2-2 என சமன் செய்ய நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என நம்புகிறேன். தவிர, இரண்டு பயிற்சிப் போட்டிகளிலும் தோற்றபின்தான், முதல் ஒருநாள் போட்டியில் வென்றோம்.

இதேபோல், இரண்டு ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து தோற்ற நிலையில், இன்றைய போட்டியில் வெற்றி பெறுவோம் என நம்புகிறோம். இருப்பினும், அனைத்து இங்கிலாந்து வீரர்களும் சிறப்பாகச் செயற்பட்டால்தான் வெல்ல முடியும். அனைவரும் சிறப்பாக செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. தொடரை வெல்ல முடிந்தவரை முயற்சிப்போம். எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவது போட்டி இன்று இடம் பெறவுள்ளது.

# கிளார்க் ஆடுவதில் சந்தேகம்



பயிற்சியின் போது ஏற்பட்ட காயத்தினால் இன்று இடம்பெறவுள்ள இலங்கை அணிக்கெதிரான ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் பங்குகொள்வது சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று இடம்பெற்ற பயிற்சிகளின்போது மைக்கல் கிளார்க் தனது முழங்காலில் உபாதையை ஏற்படுத்தியுள்ளார். அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதை பாரதூரமானதாகக் கருதப்படுகிறது.

5 போட்டிகள் கொண்ட தொடரில் 4 போட்டிகளின் பின்னர் இலங்கை அணி 2 – 1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கும் நிலையில், இத்தொடரை அவுஸ்ரேலிய அணி வெற்றிகொள்ள முடியாது என்றபோதிலும், இன்றைய போட்டியில் வெற்றி பெற்றால் மாத்திரமே 2 – 2 என்ற கணக்கில் தொடர் தோல்வியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

அவுஸ்ரேலிய அணியின் துடுப்பாட்டம் இத்தொடரில் தடுமாறி வரும் நிலையில் மைக்கல் கிளார்க் முக்கியமான துடுப்பாட்ட வீரராகக் காணப்படுகிறார்.

மைக்கல் கிளார்க் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது போனால் அவுஸ்ரேலிய அணி பின்னடைவைச் சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



மத்திய அமெரிக்க அணிகளுக்கிடையிலான வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி ஒன்றில் கோஸ்ரா ரிச்சாஸ் அணியும், சல்வாதரீரா சலன்ஜஸ் அணிகள் நேற்று முன்தினம் மோதின. இதில் சலன்ஜஸ் அணி வீரர் அந்தரத்தில் பந்தை அடிப்பதைக் காணலாம்.

# மரதன் ஓட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நாளைய தினம் காலை 6.00 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டி இடம்பெறவுள்ளதாகப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

ஆண்கள், பெண் என இரு பிரிவு-களாக இடம்பெறவுள்ள இப்போட்டி அதிகளவிலான ஆசிரியர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் சிறப்பான முறையில் முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இல்லங்கள் பிரிக்கப்பட்ட, இல்ல வீர,வீராங்கனைகள் தொடர் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், கடந்த ஆண்டை விட. இந்த ஆண்டு போட்டிகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

(எஸ்.பி.)

# மும்பை இந்தியன்ஸ் ஆலோசகராக கும்ளே



(மும்பை)


ஐ.பி.எல்.மும்பை இந்தியன்ஸ்அணியின் ஆலோசகராக இந்திய அணியின் முன்னாள் கப்டன் அனில் கும்ளே நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2011இல் ஐ.பி.எல். போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்த கும்ளேபெங்களூர் அணியின் ஆலோசகராகப் பணியாற்றினார்.

கும்ளே, இந்த ஆண்டு நடக்கவுள்ள 6ஆவது ஐ.பி.எல். தொடரில், மும்பை இந்தியன்ஸ் அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து கும்ளே கூறுகையில், பெங்களூர் அணியின் கப்டன் மற்றும் ஆலோசகராகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கிய பெங்களூர் அணியில் உரிமையாளருக்கும், நிர்வாகத்திற்கு, மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எனது பணியைச் சிறப்பாக செய்தேன் என்ற மனநிறைவுடன் பெங்களூர் அணியில் இருந்து விலகுகிறேன். மும்பை அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. இப்பணியைச் சிறப்பாக செய்வேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனத் தெரிவித்தார்.

# கபில்ராஜ், அனோஜன், துவாரகசீலன் சதம் சென். ஜோன்ஸ் பெரு வெற்றி



கபில்ராஜ்



துவாரகசீலன்



அனோஜன்

(யாழ்ப்பாணம்)

கபில்ராஜ், துவாரகசீலன், அனோஜன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 264 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதன் ஒரு போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், சென் ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதின. இப்போட்டி கடந்த 18,19ஆம் திகதிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியானது கவாஸ்கர், விந்தாரகன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யூனியன் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும். இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிந்தரகன் ஆட்டமிழக்காது 10, அன்றூ 10, ஜெரூசன் 08, அகிபன் 07 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கவாஸ்கர் மூன்று ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், விந்தாரகன் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, கபில்ராஜ், துவாரகசீலன், அனோஜன் ஆகியோர் சிறப்பான ஆட்டத்துடன் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றனர். இறுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 464 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் 188 பந்துகளை எதிர்கொண்ட கபில்ராஜ் 13 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 120 ஓட்டங்களையும், துவாரகசீலன் 113 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள், இரண்டு சிக்ஸ்ர்கள் அடங்கலாக 114 ஓட்டங்களையும், ஆபிரகாம் அனோஜன் 104 பந்துகளை எதிர்கொண்டு 11 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 102 ஓட்டங்களையும் பெற்றனர். அண்மைக் காலத்தில் இனிங்ஸ் ஒன்றில் மூன்று வீரர்கள் சதம் அடித்தமை இதுவே முதல் தடவை. பந்து வீச்சில் நிரோஜன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

410 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய யூனியன் கல்லூரி அணி, பிருந்தாபனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் விரைவாக விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. இறுதியில் யூனியன் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் இனிங்ஸ் மற்றும் 268 ஓட்டங்களால் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி பெருவெற்றிபெற்றது. துடுப்பாட்டத்தில் மகிழ்ராஜ் 50, பிரகாஸ் 24, அகிஷன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட பிருந்தாபன் 50 ஓட்டங்களைக் கொடுத்து எட்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

(எஸ்.பி.)



பிருந்தாபன்

## விளையாட்டுச் செய்திகள்

# கரப்பந்து போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் மகுடகண்காட்சியை முன்னிட்டு கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியை நடத்த விளையாட்டு அமைச்சின் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களமும், இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனமும் இணைந்து தீர்மானித்துள்ளன.

இப்போட்டி தேசிய கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டி, பயிற்சியாளர்களுக்கான கடற்கரைக் கரப்பந்தாட்டப் போட்டி என இரு பிரிவுகளாக நடத்தப் படவுள்ளன.

பயிற்சியாளர்களுக்கான கடற்கரைக் கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குகொள்ளவுள்ள போட்டியாளர்கள் 1992-01-01இற்கு பின் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும் எனவும், தேசிய கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிக்கு வயதெல்லை இல்லை எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டித் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகளை யாழ். கரப்பந்தாட்ச் சங்க தலைவர், செயலாளர் ஆகியோரிடம் விண்ணப்பங்களைப் பெற்று பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒரு கழகத்திலிருந்து தலா மூன்று அணிகள் பங்குபற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(93)

# 4ஆவது ஆட்டம் இன்று

(மொகாலி)

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடை யிலான நான்காவது ஒரு நாள் போட்டி இன்றைய தினம் மொகாலியில் நடைபெறவுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் 2-1 என்ற கணக்கில் வெற்றிபெற்று இந்திய அணி முன்னிலை வகிக்கின்றது. வழமை போன்று இப்போட்டி மதியம் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

(டர்பன்)

பாகிஸ்தான் அணிக்கெதிராக இடம் பெறவுள்ள மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்மித் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இக்குழாமில் 13 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.


நியூசிலாந்திற்கெதிரான தொடரின் முதலாவது போட்டியில் பங்குபற்றியிருந்த பிலாந்தர், இரண்டாவது போட்டியில் உபாதை காரணமாக சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

அவருக்கு ஏற்பட்ட பின்தொடைத்தசை உபாதை குணமாகியுள்ளதையடுத்தே அவர் இப்போது அணியில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலானமூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்டுள்ள 13 பேர் கொண்ட குழாம்: கிரேம் ஸ்மித், ஹசிம் அம்லா, ஏபி.டி.வில்லியர்ஸ், பப் டு பிளிசஸ், டீன் எல்கர், ஜக்ஸ் கலிஸ், ரோறி கிளெய்ன்வெல்ட்ற், மோர்னி மோர்க் கல், அல்விரோ பீற்றர்சன், ரொபின் பீற்றர்சன், வேர்ணன் பிலாந்தர், ஜக்ஸ் ருடோல்ப், டேல் ஸ்ரெய்ன்.

அணித் தேர்வு சிறந்த முறையில் இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சி. பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரை நாம் கைபற்றிக்கொள்வோம் என அணித் தெரிவின் பின் தென்னாபிரிக்க அணியின் தெரிவுக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.



# மணி கழகம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரம் சங்கத்தினால்யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடை யில் நடத்தப்படும் கரம் சுற்றுபோட்டியில் மணி விளையாட்டுக்கழகம் சம்பியனாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் மணி விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

இரண்டாமிடத்தினை ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக 'ஏ' அணியும், மூன்றாமிடத்தினை ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக 'பி' அணியும் பெற்றுக்கொண்டன.

கரம் போட்டியில் அதிகளவிலான அணிகளை வளர்ப்பதே எமது நோக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு பெருமளவு அணிகள் பங்குபற்றியிருப்பது மகிழ்ச்சி. அடுத்து வரும் ஆண்டுகளில் மேலும் பல அணிகள் பங்குபற்ற வாய்ப்பிருப்பதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாண லீக் அணி வெற்றி

(உரும்பிராய்)

இலங்கை கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையிலான போட்டி ஒன்றில் யாழ்ப்பாண லீக் அணி அபார வெற்றிபெற்றது. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் வருடா வருடம் நடத்தப்பட்டு வரும் லீக் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி தேசிய ரீதியில் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதன் முதல் சுற்று ஆட்டமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணியும், யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணியும் மோதின. ஆரம்பம் முதலே யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணி ஆதிக்கம் செலுத்தியது. முற்பாதி ஆட்டத்தில் 3 – 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணி, பிற்பாதி ஆட்டத்தில் மேலும் இரு கோல்களைப் போட்டது. இறுதியில் 5 – 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணி, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இரண்டாவது போட்டியில் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் அணி கிளிநொச்சி மாவட்ட லீக் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# முக்கிய கலந்துரையாடல்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 2013ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும்திங்கட்கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இக் கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் தலைவர்கள், செயலாளர்களை கலந்துகொள்ளும்படி நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான 2013 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ். பிரதேச செயலாளர் திருமதி சு. தெய்வேந்திரம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# சிறுவர்போராளிகள் எதிர்நோக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் ௭

– ருவான் எம் ஜயதுங்க

பிள்ளைகள் அவர்களின் மூத்தவர்களிடமிருந்து (குடும்பம் மற்றும் கிளர்ச்சி தலைவர்கள்) கலப்படமான பல தரப்பட்ட செய்திகளையும் பெறும்போது, குழப்பத்துக்கு ஆளாகிறார்கள். அவர்களின் ஒழுக்கமான சிந்தனைகள் வித்தியாசமான திசைகளை நோக்கி திருப்பப் படுகிறது. சிறுவர் உளவியலாளர் ஜீன் பியாகெட், வளர்ந்த சிறுவர்கள் பெரும்பாலும் தவறான வைகளை நெறிப்படுத்த அந்த நடவடிக்கையின் பின்னாலுள்ள நோக்கத்தை கொண்டு தீர்ப்பு வழங்கும் வகையில் காட்சிகள் நடைபெறுவதை கண்டறிந்தார்.

கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் 10 அல்லது 11 வயதுள்ள சிறார்களின் தார்மீக சிந்தனைகள் வேறு பல மாற்றங்களுக்கு உட்படுகின்றன. குறிப்பாக இளம் பிள்ளைகள் தங்களுடைய தார்மீக தீர்ப்புகளைப் பெரும்பாலும் விளைவுகளின் அடிப்படையிலேயே முடிவு செய்கிறார்கள், அதேவேளை வளர்ந்த பிள்ளைகள் தீர்ப்புகளை தங்கள் உட்கருத்துக்களின் அடிப்படையில் தீர்மானிக்கிறார்கள். உதாரணமாக ஒரு இளம் பிள்ளை கேள்விப்படுகிறது, ஒரு பையன் தனது தாயாருக்கு உதவி செய்யும் முயற்சியில் ஈடுபட்டபோது அவன் 15 குவளைகளை உடைத்தான், மற்றும் இன்னொரு பையன் பலகாரங்களை திருட முயற்சி செய்யும்போது, ஒரே ஒரு குவளையை மட்டுமே உடைத்தான் என்று.

எனவே அந்த இளம் பிள்ளை முதலாவது பையன் மோசமான செயலை செய்தான் என்று நினைக்கிறது. அந்தப்பிள்ளை முதற் காரியமாக இழப்பீட்டின் எண்ணிக்கையை கருத்தில் கொள்கிறது, - அதாவது விளைவு-களை - அதேவேளை வயது முதிர்ந்த பிள்ளை அநேகமாக தவறுகளை அதன் செயல்பாட்டின் பின்னுள்ள நோக்கத்தை கருத்தில் கொண்டு தீர்ப்பு வழங்கும் சாத்தியம் உள்ளது (பியாகெட் 1932, பக்கம் 137).

ஒரு பிள்ளையின் தார்மீக தீர்ப்பு தண்டனையை தவிர்க்கும் நோக்கத்தை கொண்டதாகவே இருக்கும். சிறுவர் போராளிகள் கடுமையான தண்டனையிலிருந்து தப்புவதற்காக அவர்களின் தலைவர்களுக்கு கீழ்ப்படிவார்கள். கோகல் பேக்கின் கூற்றுப்படி, சிறுவர்களது - வழக்கமான ஒழுக்க நெறி (வயது 10 - 13) - தார்மீக மதிப்புகள் வழக்கமான முறை களின் அமைப்பினை நிலைநிறுத்த வேண்டி மற்றும் மற்றவர்களை சந்தோசப்படுத்துவதற்காக நல்ல அல்லது சரியான பாத்திரத்தை ஏற்று நடிப்பதிலேயே தங்கியுள்ளது. இந்த மட்டத்திலுள்ள சிறுவர்போராளிகள் தங்கள் தலைவர்களையோ அல்லது சகதோழர்களையோ பிரீதிப்படுத்த வேண்டி எந்தவித குற்ற உணர்வோ வருத்தமோ இல்லாது வன்முறை செயற்பாடுகளை நடத்த முடியும். அவர்கள் கேள்வி கேட்காது தங்களின் மூத்தவர்களின் கட்டளைகளை நிறைவேற்றுவார்கள்.

அல்பர்ட் பந்துரா போன்ற சமூக கற்கை கோட்பாட்டாளர்கள், சிறுவர்கள் ஆரம்பத்தில் முன்மாதிரிகள் ஊடாக எவ்வாறு ஒழுக்கமாக நடப்பது என்பதை கற்கிறார்கள் என்கிறார்கள். அநேக சிறுவர் போராளிகள் அவர்களது சமூக நடத்தைகளை அவர்களது மூத்த போராளிகளிடமிருந்தே கற்றுக் கொள்கிறார்கள், இந்த மூத்த உருவங்கள் பல வருடங்களுக்கு அவர்களின் முன்மாதிரிகளாக வலம் வருவார்கள். வலுச் சண்டைக்கு போதல் மற்றும் வன்முறைகளைப் புரிதல் என்பன ஏற்றுக்கொள்ளக்கூடிய நடத்தைகள் மற்றும் எதிரியை கொலை செய்வது சரியானது என்று அவர்களுக்கு கற்பிக்கப் பட்டுள்ளது. இரக்கம், கருணை மற்றும் மன்னிப்பு என்பன பலவீனத்தின் அறிகுறிகள் என்று தொடர்ச்சியாக அவர்களுக்கு போதிக்கப்பட்டு வந்துள்ளது. இலங்கையிலுள்ள தமிழ் சிறுவர்கள் இந்த நிகழ்வுகளால் காயம்பட்டு அவர்களது பிள்ளைப்பராயத்தின் முக்கியமான அம்சங்களை அடைய முடியாமல் பல்வேறு வித்தியாசமான வழிகளில் தடுக்கப்பட்டார்கள் (ஹூல் 2003). கடந்த பல வருடங்களாக இலங்கை சிறுவர்போராளிகளைத் திட்டமிட்டு கோரமான சூழ்நிலைக்கு அவர்களை உட்படுத்தியதால் தங்களது அப்பாவித் தன்மையையும் ஒழுக்க உணர்வையும் அவர்கள் தொலைத்து விட்டார்கள்.




பிள்ளைகள், அடிக்கடி அவர்களது மூத்த உறுப்பினர்களது ஆக்கிரமிக்கும் மற்றும் வன்முறையான நடத்தைகளை அவதானித்துக் கொண்டேயிருக்கின்றன. தமிழ்புலி களின் மூத்த உறுப்பினர்களோ கொலைகளையும் சித்திரவதைகளையும் சிறுவர்கள் அவதானித்து கற்றுக் கொள்வதற்காக அவர்களுக்கு முன்னால் வைத்து நடத்தி வருகிறார்கள். சிறுவர்கள் மற்றவர்கள் நடத்தும் அத்தகைய செயல்களை கற்றுக் கொள்வதுடன் தாங்கள் அடையும் அதிர்ச்சியிலிருந்தும் அவர்களால் மீள முடிவதில்லை. (கிறிஸ்டோனிஸ் மற்றும் ஹார்ட் 2006).

(தொடரும்)

# தஞ்சை பெரிய கோயில்!

இது எப்படி சாத்தியமானது?! தஞ்சாவூர் பெருவுடையார் கோயில் எப்படி கட்டப்பட்டது?

இரண்டு அல்லது மூன்று தளங்களை மட்டுமே கொண்டு கோயில்கள் கட்டப்பட்டு வந்த காலத்தில், கற்களே கிடைக்காத காவிரி சமவெளிப் பகுதியில், 15 தளங்கள் கொண்ட சுமார் 60 மீற்றர் உயரமான ஒரு கற்கோயிலை ராஜராஜன் எழுப்பியது என்பது மாபெரும் சாதனையே. அது மட்டுமன்றி, கல்வெட்டுகள், சிற்பங்கள், ஓவியங்கள், வழிபாட்டுக்கான செப்புத் திருமேனி கள் என்று பல புதிய அம்சங்களையும் இத் திருக்கோயிலில் புகுத்தி கோயில் கட்டும் கலை யில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளான்.

பாரந்தூக்கிகள் முதலியன இல்லாத ஒரு காலத்தில் சுமார் 60 மீற்றர் உயர கோபுரம் எவ்வாறு கட்டப்பட்டது? கருவறையின் இரு தளங் களிலும் விமானத்தின் பதின்மூன்று மாடிகளும் சேர்ந்து 15 தளங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



சுமார் 42,500 தொன் எடையுள்ள விமானம். சுமார் 1.2 மீ × 1.2 மீ சதுரத்தில் 0.6 மீ × 0.6 × 0.6 மீ அளவு கற்களை ஒவ்வொரு அடுக்கிலும் நான்கு கற்கள் என்ற கணக்கில் அடுக்கிக் கொண்டே போய் பாறை யில் எப்போது விரிசல்கள் விழுகின்றன என்பதைக் கவனித்த பின்னரே கடைக்காலின் அளவுகள் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாறையின் மேல் வரும் அழுத்தம் குறித்த சோதனை-களை இக்கோயில் நிர்மாணித்த சிற்பிகள் மேற்கொண்டனர் என்பது இக்கோயிலின் மற்றொரு சிறப்பம்சமாகும்.


விமானம் 13 தட்டுகளைக் கொண்டது. முதல் மாடியின் உயரம் சுமார் 4.40 மீற்றர், பதின்மூன்றாவது மாடியின் உயரம் சுமார் 1.92 மீ. பதின்மூன்று மாடிகளின் மொத்த உயரம் 32.5 மீற்றராகும். அதாவது பிரகாரத்திலிருந்து விமானத்தின் 13ஆவது மாடி சரியாக 50 மீ. உயரத்தில் உள்ளது. தஞ்சை சிற்பிகள் இந்த உயரத்தை மூன்று சம உயரப் பகுதிகளாகப் பிரித்துள்ளனர்.

அதாவது, கருவறை மேல் மாடி உயரம் 16.5 மீ. விமானத்தின் முதல் மாடியிலிருந்து 5ஆவது மாடி 16.5 மீ. விமானத்தின் 6ஆவது மாடியிலிருந்து 13ஆவது தளம் வரை 16.5 மீ.

ஒன்றுக்கு மேற்பட்ட சாய்வுப் பாதைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இவை பல ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கும் வகையில் அமைக்கப்பட்டன. சாய்வுப் பாதையின் இருபக்கங்களிலும் கற்கள் - சுண்ணாம்புக் கலவை கொண்டு கட்டப்பட்ட உறுதியான சுவர்கள் இருந்தன. இந்த இரு சுவர்களுக்கு நடுவில் உள்ள பகுதி (4 அல்லது 5 மீ. அகலம் இருக்கலாம்) பெரிய மற்றும் சிறிய உடைந்த கற்கள், துண்டுக் கற்கள் ஆகியவற்றால் நிரப்பப்பட்டன. மண்ணால் அல்ல. யானைகள் பாறைகளை இழுத்துச் செல்வதற்கு ஏற்ற மிதமான சாய்வுடன் அமைக்கப்பட்டன. மழைநீர் வடியவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விமானக் கட்டுமானப் பணிகள் அனைத்தும் முடிவுற்றதும் சாரங்கள் கலைக்கப்பட்டு, கற்கள், மண், மரம் அனைத்தும் கோயில் மதில் சுவர், மதில் சுவர் உள்புறத்தில் காணப்படும் துணைக் கோயில்கள், நுழைவுவாயில்கள், சாலைகள் அமைப்பது முதலிய கட்டுமானங்களில் எவ்வித சேதாரமுமின்றி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# மனிதனே உணவு!



- சுறாமீனில் மட்டும் 150 வகை இனங்கள் உள்ளன.
- ஓரடி நீளத்திலிருந்து 70 அடி நீளம் வரை சுறாமீன்கள் உள்ளன.
- வெள்ளைச் சுறா மிகவும் கொடூரமான குணம் உடையது.
- வெள்ளைச் சுறா ஒரு மனிதனை-யே உணவாக உண்ணக்கூடியது.
- சுறாமீன்களுக்கு உடலில் எவ்வளவு காயங்கள் ஏற்பட்டாலும் சீழ் பிடிப்பதில்லை.
- கடலில் சுறாமீன்கள் தோன்றி 40 கோடி ஆண்டுகள் இருக்கும் என்று கணக்கிட்டிருக் கிறார்கள்.

# ஐஸ்கிரீமில் கார் ஓட்டலாம்!





ஐஸ்கிரீம்களை சுவைக்க மட்டும் தான் முடியும் என நினைத்து விடாதீர்கள். இனிமேல், கார்களை இயக்குவதற்கான எரி பொருளாகவும், அவற்றைப் பயன்படுத்த முடியும் என்ற ஆச்சரியமான விஷயம் தெரிய வந்துள்ளது.

பிரிட்டனின் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் நிக் டார்மர் தான், இந்த தகவலை தெரிவித்துள்ளார். "பெட்ரோல், டீசல் போன்றவற்றில் உள்ள காபோவைதரேற்றுகள் போல், நாம் அன்றாடம் பயன்படுத்தும், ஷம்பூ, குளியல் சவர்க்காரம் மற்றும் சுவைக்கும் ஐஸ்கிரீம் ஆகியவற்றிலும் காபோவைத்ரேற்றுகள் உள்ளன. இவற்றிலிருந்து ஐதரோ காபன்களை எடுத்து, கார்களுக்கு எரிபொருளாக பயன்படுத்த முடியும்" என்கிறார். ஆனாலும், இதுகுறித்த ஆய்வு இன்னும் முழுமை பெறவில்லை. சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் பெட்ரோல், டீசல் போன்றவற்றுக்கு பதிலாக, மாற்று எரிபொருளைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களுக்கு இது மகிழ்ச்சியான செய்தி தான்!

# யானை அழகுப் போட்டி!

யானைகளுக்கான அழகுப் போட்டியை நேபாளத்தில் நடத்துகின்றனர். சமீபத்தில் நடந்த இந்தப் போட்டியில், நேபாளத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், 90 யானைகள் பங்கேற்றன. பாகன்களுக்கு கட்டுப்படுவது, கம்பீர தோற்றம், ஒழுக்கம், அலங்கரிப்பு ஆகியவற்றை அடிப்படையாக வைத்து, மதிப்பெண்கள் அளிக்கப்பட்டன. இதற்காக, மூன்று நடுவர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். இறுதியாக, ஐந்து யானைகள் தேர்வு செய்யப்பட்டு, அதிலிருந்து முதல் மூன்று யானைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இதில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட, நேபாள தேசிய பூங்காவைச் சேர்ந்த சித்வான் காலி என்ற யானை, முதல் பரிசை தட்டிச் சென்றது. இரண்டாவது பரிசு பிரகிர்த்தி காலி என்ற யானைக்கு கிடைத்தது.



- R.P. ராஜநாயஹம்

# பனைசை மணியன்



பனசை மணியன் ஒரு திரைப்படம் இயக்கியவர். "நான் நன்றி சொல்வேன்" என்ற படம். 1979இல் வெளிவந்த, ஸ்ரீப்ரியா, சிவசந்திரன் நடித்த படம். டப்பாவுக்குள் போய்விட்டது என்று சொல்லத் தேவையில்லை.

பனசை மணியன் காதல் படுத்தும் பாடு(1966) படத்தில் தொடங்கி கலைஞானத்துடன் இணைந்து பல் படங்களுக்கு வசனம் எழுதியுள்ளவர். கலைஞானம் தயாரிப்பாளராக பரிண மித்த போதும் அவருடன் வசனம் எழுதி இயங்கியவர் பனசை மணியன்.

கலைஞானம் வசதி படைத்தவரானார். ஆனால் பனசை மணியனைப் பற்றி அப்படி சொல்வதற்கில்லை. ரஜினிக்கு முதன் முதலாக பைரவி படத்தில் வாய்ப்பு தந்தவர் தயாரிப்பாளர் கலை-ஞானம். இது நம்ம ஆளு படத்தில் ப்ராடு கிருஷ்ணய்யராக நடித்தவர். பாக்யராஜுடன் பல படங்களுக்கு கதை இலாகாவில் டிஸ்கசனில் கலைஞானம், பனசை மணியன் இருவருமே பங்கேற்றவர்கள்.

அதிர்ஷடக்காரர் கலைஞானம் "இது நம்ம ஆளு" படத்தில் அட்டகாசமான ரோல் செய்தவர். பனசை மணியனுக்கும் இப்படி ஒரு படத்தில் ஒரு நல்ல ரோல் செய்து விட வேண்டுமென்று ஆசை தான். ஆனால் வாய்க்கவே இல்லை.

பனசை மணியன் ஒரு Compulsive talker. பத்து பேராக இருந்தாலும், ஒரே ஒருவர் இருந்தாலும் அடைமழை போல் பேசிக்கொண்டே இருப்பார். பேச்சில் உற்சாகம் கரை புரண்டோடும்.

ஒரு காலத்தில் தன்னிடம் வேலை கேட்டு வந்த பாக்யராஜ் இன்று எட்டு கண்ணும் விட்டு எரிய திரையுலகை கலக்கும்போது அவரிடம் அடக்கமாக குழையும் கலைஞானம் பற்றி "சினிமா ஷொட், பாணியில் பனசை மணியன் சொல்வார். "வருடம் 1975. கலைஞானம் வீடு. கலைஞானத்துக்கு பாக்யராஜ் காய்கறி வாங்கிக்கொண்டு வருகிறார். அப்படியே கட் பண்றோம். வருடம் 1985. பாக்யராஜ் வீடு. பாக்யராஜுக்கு கலைஞானம் காய்கறி வாங்கிக்கொண்டு வருகிறார்."

எப்போதும் ஏதாவது ஒரு சின்ன ஹைக்கூ பாணி கவிதை சொல்வார். "பெண்ணே! எப்போதும் நெருப்பாயிரு. கரியாகி விட்டால் கண்டவனெல்லாம் எடுத்து கிறுக்கி விடுவான்."

சொல்லி விட்டு அவரே தன் மேதைமையை ரசித்து சிரிப்பார்.

20 வருடங்களுக்கு முன் வீட்டில் உள்ள டி.விகளுக்கு மாடியில் அன்ட்ரெனா இருக்கும். இதைப் பற்றி பனசை மணியன் கவிதை.

"வானத்தில் வேர் விட்டு
கூடத்தில் பூக்கும் பூ!"

டி.ஆர்.ராமண்ணா, கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், சாண்டோ சின்னப்பா தேவர் என்று பெரிய ஜாம்பவான்களிடமெல்லாம் வேலை பார்த்தவர் என்பதால் பல சுவாரசியமான விஷயங்கள் இவரிடமிருந்து கிடைக்கும்.

ஒரு பெரிய டைரக்டரிடம் வேலை பார்த்த போது தற்செயலாக ஒரு அறைக் கதவை திறந்து விட்டார். அந்த டைரக்டரோ அந்த நேரத்தில் அவர் அறிமுகப்படுத்தி பின்னர் வெகு பிரபலமான ஒரு நடிகையுடன் படுக்கையில் இருந்திருக்கிறார்.


"தெரியாம கதவ திறந்துட்டமே. தெரிஞ்சா உண்டு இல்லைன்னு பண்ணிடுவானே" என்று பனசை மணியன் அவசரமாக எஸ்கேப் ஆனாராம். அதே பழம்பெரும் டைரக்டர் குமுதத்தில் இந்த வயதிலும் ஆரோக்கியமாக இருப்பதற்கு காரணம் தன்னுடைய "ஒழுக்கம்" தான் காரணம் என்று கூறியிருந்தார்.




# காதல்கள்

**காதல்... – 1973**

ஊர்த் திருவிழா எப்பவரும் என்று இருந்தது அவனுக்கு.. பெரியதம்பியர் வீடுத்து வீடுதான் என்றாலும் அவற்றை பெட்டையை பார்க்கிறது குதிரைக் கொம்பா இருக்கு. 10 பரப்பு காணிக்கு பனைமட்டை வரிச்சு வேலியைப் போட்டு பிறகு வீட்டின்ர




பின்பக்கத்தை சுற்றியும் 10 அடி அகலத்திலை இடைவெளிவிட்டு இன்னொரு கிடுகுவேலி. அவற்றை இளைய பெட்டையைப் பத்தாவதோடை படிப்பை நிப்பாட்டிப் போட்டார். இப்ப நாலைந்து வருஷமாய் இப்படி திரு விழா கலியாண வீடு எண்டு கண்டாச் சரி, இல்லாட்டி தலைக்கறுப்பையும் காணக்கிடையாது.

திருவிழாவும் வந்தது சாமி காவேக்கை கொம்பின் பின்புறம் கடைசி ஆளாய் இவன் தூக்கிக் கொண்டிருந்தான். பெரியதம்பியர் மீசையை முறுக்கிக்கொண்டு கட்டளையிட்டுக் கொண்டிருந்தார். சுவாமி தெற்கு வீதியால் திரும்பேக்கை இடிபட்ட சனக்கூட்டத்தில் இவனது கையில் ஒரு துண்டுக் கடிதம் திணிக்கப்பட்டது. இவனைக் கடந்து பெரியதம்பியரின் இளைய பெட்டை போய்க் கொண்டிருந்தாள்...

**காதல் – 1993**

இரவு முழுக்க ஒரே ஷெல்லடி... அப்பா.. தலையை வலிக்கிறது. நித்திரையில்லை. ஒரே அவளின் கனவு. விரும்பிறாளா இல்லையா எண்டு கண்டுபிடிக்க முடியேல்ல... ஷெல்லடி பொம்மரடி என்று பள்ளிக்கூடமும் ஒழுங்கா நடக்கிறேல்ல.. ரியூசனும் அவள் ஆர்ட்ஸ் நான் சயன்ஸ் சந்திப்பது குறைவு. ஒரே ஒரு ஆறுதல் அந்த பங்கர் தான்.

நீங்க திகைக்கிறது எனக்கு விளங்குது. சொல்றன் பொறுங்கோ.. எங்கட வீட்டுக்கும் அவையின்ர வீட்டுக்கும் பொதுவாக ஒரு பங்கர் தான். இரண்டு வீடுமே காசு போட்டு பொதுவான ஒரு பெரிய பங்கர் வெட்டியிருக்கிறம். ஷெல்லடி பொம்பரடிக்குள்ள எல்லாரும் அதுக்குள்தான். மிதமான இருட்டு.. வியர்வைத்துளிகள், கால் கொலுசு, லேசான பவுடர், பங்கர் என்ன பங்கர்




எனக்கு அது வசந்த மாளிகை. சர்வதேச வானொலியில லீவியின் சினிமாப் பாடல் கேட்டுக் கொண்டிருக்கேக்கை வீட்டில் கத்தினார்கள். பொம்பர் வருகுது பொம்பர் வருகுது... எடேய் சகடை-யடா! நான் பரவசமாய் பங்கருக்குள் பாய்ந்தேன். ஏற்கனவே அங்கே அவள்... பலவித கதைகள், பலவித சத்தங்கள், வெடியோசை அதிர்வு அவளும் காதைப் பொத்தியபடி என்னைப் பார்த்துக்கொண்டிருந்தாள். மெல்லிய இருட்டு நானும் பார்த்தேன். அவள் தனது கொண்டை கிளிப்பையெடுத்து பங்கர் மண் சுவரில் ஏதோ நோண்டிக் கொண்டிருந்தாள்.

பொம்பர்கள் போனாப் பிறகு எல்லாரும் போனாப்பிறகு... கிட்டப்போய் அவள் கிறுக்கின இடத்தைப் பார்த்தேன். மண் சுவரில் இரண்டு இதயம் வரையப்பட்டிருந்தது.

**காதல் – 2013**

நேற்று அவளை பேஸ்புக்கில காணேல்லை... சும்மா (Offline mode) ஓப்லைன் மோட்ல இருந்து கொண்டு அலைக்கழிக்கிறாளோ தெரியேல்ல. கிரிஷாந்தும் அவளை ட்ரை பண்றான் என்று பெடியள் சொல்றான்கள். தலை-யை பிச்சுக் கொள்ளலாம் போலை கிடக்கு.

அடக்.. கள்ளி ஒன்லைன்ல தான் இருக்கிறாள் இப்ப ஒரு போட்டோ ஒண்டு அப்லோட் பண்ணி இருக்கிறாள். ஒப்லைன்ல விட்டு இருக்கிறாள். என்ர மொபைல் நம்பரை மெசேஜ்ல போடுவம் ஏதாவது பதில் வருகுதா பாப்பம்...



சூ... நான் போட்ட படத்தை இப்ப 2 செக்கனுக்கு முதல் லைக் பண்ணி இருக்கிறாள். வாவ்... மொபைலுக்கு றிப்ளை பண்ணிற்றாள்... "Hi... I am tharshi.." வேறென்ன வேணும் எனக்கு... என்ன அனுப்பலாம்.. வெயிட்.. அப்பா நித்திரையோ எண்டு பாக்கோணும்... ம்... மனுசன் நல்ல நித்திரை.. How R U எண்டு போட்டுப் பார்ப்பமா... இதென்ன ஒரு மெசேஜ் சத்தம் கேட்குது தர்ஷி தானோ...? அடக்கடவுளே.. கவிதாவும் இரண்டு இதயம் போட்டு படம் அனுப்பியிருக்கிறாள்.....!??

# சூப்பர் மனிதர்கள்




**அ**ண்டத்தில் நம்மைவிட அறிவார்ந்த உயிர்களைத் தேடும் பணியானது, 'செற்றி' (SETI — SEARCH FOR EXTRA TERRESTRIAL INTELLIGENCE) என்ற அமைப்பினால் பிரபஞ்சத்தில் எங்கிருந்தாவது செயற்கை ரேடியோ கதிரலைகள் பூமிக்கு வருகின்றனவா என்று கவனிப்பதுதான். செயற்கை ரேடியோ அலைகள் அறிவுஜீவிகளால்தான் உருவாக்க முடியும். அவ்வாறு செய்திகள் வந்தால் அதுதான் வேற்று கோளில் நம்மைப் போன்ற அறிவுஜீவிகள் வாழ்வதற்கு அடையாளமாகும். இதற்காக அதிநவீன ரேடியோ தொலைநோக்கிகளை உபயோகித்து இரவு பகல் என்று பாராமல் வருடம் முழுவதும் வானத்தை ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

தேடுதல் பணியை 'செட்டி' சுமார் 40-50 ஆண்டுகளாக செய்துவருகிறது. பிரபஞ்சத்தைப் பொறுத்தவரை இது மிக மிக குறுகிய காலம். தேட ஆரம்பித்து சில ஆண்டுகளே ஆவதற்குள் பிரபஞ்சத்தில் அறிவுஜீவிகள் இல்லை என்ற முடிவுக்கு வரமுடியாது. நம் பால்வெளி மண்டலத்திலேயே பல கோள்களில் அறிவுஜீவிகள் இருப்பதற்கான வாய்ப்புண்டு என்று விஞ்ஞானிகள் உறுதியாக நம்புகின்றனர். நம் பால்வெளியில் பல ஆயிரம் கோடி நட்சத்திரங்களும், அதைச் சுற்றி பல கோள்களும் உள்ளன.

பிரபஞ்சத்தில் ஒவ்வொரு நட்சத்திரமும் ஒன்றை விட்டு ஒன்று மிகுந்த தொலைவில் உள்ளதால், ஒரு கோளில் இருந்து அனுப்பப்பட்ட செய்தி மற்றக் கோளை அடையும் முன்னரே, செய்தி அனுபபிய கோள், துரதிஷ்டவசமாக அழிந்து போவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன என்பது மிகவும் கசப்பான, மறுக்க முடியாத உண்மை. சில கோள்கள் ஆயிரம் ஒளிவருடங்கள் தொலைவிலும், சில இலட்சம் அல்லது கோடிக்கணக்கான ஒளிவருடங்கள் தொலைவிலும் உள்ளபோது அங்கிருந்து வரும் செய்திகள் இங்கு வந்து சேருவதற்குள் அந்த கோள் அல்லது அதில் வாழும் உயிர்கள் அழிந்து போக வாய்ப்புள்ளது.

சரி, ஒரு கோளிலிருந்து செய்தி வந்து



விட்டது. அதற்கு நாமும் பதில் அனுப்பிவிட்டோம். இருவருக்கும் மற்றவர்கள் பிரபஞ்சத்தில் எங்கிருககின்றனர் என்று அறிந்துவிட்டது. மேலே என்ன செயவது? ஒன்றும் செய்யமுடியாது. அவர்கள் அங்கேயும் நாம் இங்கேயும் இருந்து கொள்ள வேண்டியதுதான். எப்படி அவர்களைப் போய் சேர முடியும்?

அதனால் வேறு ஒரு கோளில் அறிவுஜீவிகள் இருப்பது தெரிந்தும் கூட, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பது போல நாமும் அவர்களும் அவரவர் இடத்தில் இருந்துகொள்ள வேண்டியதுதான். சந்திப்பதற்கு இப்போது வழியே இல்லை.

வருங்காலத்தில் அறிவியல் மேலும் வளர்ச்சி அடையும்போது, ஒளியின் வேகத்தில் செல்லும் வாகனத்தைக் கண்டுபிடித்து, அதில் பயணம் செய்யும் சிரமங்களையும் நிவர்த்தி செய்தபின் அல்லது வேறு சில உத்திகளின் மூலம் நட்சத்திரப் பயணத்தை எளிதாக்கி, பூமியை விட்டுச் சென்று மனிதன் வெகு தொலைவில் உள்ள பல கோள்களில் வசிக்கத் தொடங்குவான். அப்போது விசிததிரமான, வினோதமான, எதிர்பார்க்காத ஒரு பரிணாம வளர்ச்சி அந்தக் கோள்களில் உள்ள மனிதர் களுக்கு நடக்கும்.

'விண்வெளி'யில் ஈர்ப்பு விசை இல்லை. நம் கைகளை விட கால்கள் பலமானதாக இருக்கக் காரணம், நாம் நடக்கும்போது நம் கால்கள் தான் ஈர்ப்பு விசையை எதிர்த்து நம் உடலை தூக்கிக் கொண்டு செல்கின்றது. அதனால் கால்கள் வலுப் பெறுகின்றன. ஈர்ப்பு விசை இல்லையென்றால் கால்கள் கைகளைப் போலத்தான் இருக்கும்.

ஈர்ப்பு விசை குறைவாக உள்ள ஒரு கோளில் மனிதன் பல ஆண்டுகளாக வசிக்க ஆரம்பித்தால், அவனுடைய கால்கள் குச்சி போல ஆகும். பூமியில் வாழும் மனிதனுக்கும் அவனுக்கும் முதல் உடல் வேற்றுமை வரும். ஒருக்கால், அந்த கோள் ஈர்ப்பு விசை பூமியை விட அதிகமாக இருந்தால், அவனது கால்கள் நம் கால்களை விட மிக வலிமையாக இருக்கும். அந்தக் கோளின் ஈர்ப்பு பலமடங்கு அதிகமாக இருந்தால், அங்கே நடப்பதே மிகக்கடினமாக இருக்கும். ஊர்வது தான் எளிதாயிருக்கும். அங்கே உள்ள மனிதர்கள் அதைத்தான் செய்ய ஆரம்பிப்பார்கள். நமக்கும் அவர்களுக்கும், இது போன்ற பல உடலமைப்பு வேறுபாடுகள் தோன்றும். காலப்போக்கில் அவர்களுக்கு ஒரு மனிதனைப் போன்ற தோற்றம் கூட இல்லாமல் போய்விடும். அவர்கள் பூமிக்குத் திரும்ப வந்தால், நாம் அவர்களைப் பார்த்து நம் உறவினர்கள் என்று சொல்ல மறுப்போம். சிம்பன்சி குரங்குகளை நம் உறவினர் என்று ஒத்துக்கொள்ள இப்போது நாம் மறுப்பது போல.

இப்போது உலகில் உள்ள வெவ்வேறு நாடுகளில் மனிதர்கள் வெள்ளை, கறுப்பு, சப்பை மூக்கு போன்ற வேறுபாடுகளுடன் இருப்பது போல, ஒவ்வொரு கோளிலும் மனிதர்கள் ஒவ்வொரு விதமான நூதனமான மாற்றம் அடைவார்கள். ஆனால் அனைவரும் மனிதர்கள்தான். அவன் ஜப்பானிலிருந்து வந்தவன், இவன் ஆபிரிக்காவிலிருந்து வந்தவன் என்று நாம் இப்போது கூறுவது போல, அப்போது இவன் அந்தக் கோளிலிருந்து வந்தவன், இந்த கோளிலிருந்து வந்தவன் என்று அவர்களை அடையாளம் சொல்லும் நிலை வரும்.

1977 இல் voyager-1 மற்றும் voyager-2 என்ற இரண்டு விண்கலங்கள் அனுப்பப்பட்டன. வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியுன் ஆகிய கோள்களை ஆய்வு செய்யவும், நமது சூரிய குடும்ப எல்லையைத் தாண்டி, 'வெளியில்' பயணம் செய்து ஆய்வு நடத்தவும் இவை அனுப்பப்பட்டன. இவை இரண்டிலும் தங்க முலாம் பூசப்பட்ட ஒளி, ஒலி தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. அதில் மனிதன் மற்றும் இங்குள்ள பல உயிர்களின் உருவங்கள், பல்வேறு மொழிகள், கலாசாரம், அறிவியல் வளர்ச்சி, இசை ஆகிய பூமியைப் பற்றிய பல செய்திகள் பதியப்பட்டுள்ளன. வேற்றுக்கோள் அறிவுஜீவிகள் இந்த தகட்டை காண்பார்களேயானால், நம்மைப் பற்றி எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்வார்கள் என்ற எண்ணத்தில் அப்படி செய்தார்கள்.

சூரியனை விட்டு சுமார் 1800 கோடி கிலோமீற்றர்கள் பயணம் செய்து, மேலும் தன் நட்சத்திரப் பயணத்தை வெற்றிகரமாகத் தொடரும் அந்த விண்கலம் வேற்றுக்கோள் அறிவுஜீவிகளுக்கு நம்மைப் பற்றிய விவரத்தை என்றாவது ஒருநாள் நிச்சயமாகக் கொடுக்க உதவும் என்று நம்புகிறார்கள்.

நமக்கு பழங்கால குகைவாசிகள் எப்படியோ அதுபோலத்தான் வேற்றுக்கோள் சூப்பர் மனிதர் களுக்கு நாம். விஞ்ஞானத்தில் அவர்கள் நம்மை விட பல மடங்கு முன்னேறியவர்கள். அவர்களை நாம் தேட வேண்டிய அவசியம் இல்லை. நம் முடைய சிக்னல் கிடைத்தால் போதும். சூப்பர் மனிதர்கள் இருந்தார்களேயானால், அவர்களே நம்மைத் தேடி வந்துவிடுவார்கள்.

வேற்றுக்கோள் சூப்பர் மனிதர்கள் இங்கு வந்ததாக பல சுவையான திரைப்படங்கள் வந்துள்ளன. அவர்கள் நம்மில் பலரைக் கடத்திச் சென்றதாகவும், கடத்திச் சென்ற மனிதர்களின் உடலில் சில ஆராய்ச்சிகளுக்குப் பிறகு அவர்களைத் திரும்ப பூமியில் மீண்டும் கொண்டு வந்து விட்டுவிட்டதாகவும் வெகு சுவாரசியமான, திகிலூட்டும் கதைகள் உண்டு.

நட்சத்திரப் பயணம் செய்யும் அளவுக்கு வளர்ச்சி கண்டவர்கள் ஒரு கோளில் தொடர்ந்து இருக்க மாட்டார்கள். நாடோடி மன்னர்களாகத்தான் இருப்பார்கள் என்று அறிவியலாளர்கள் கருதுகின்றனர். இந்தப் பூமியில் கிடைக்கும் நிலக்கரி, பெட்ரோல் போன்ற சக்தியின் ஆதாரங்கள் தீரத் தொடங்கி நாம் முழிப்பது போல, அவர்களது கோளில் இவை எல்லாம் தீர்ந்து விட்டால், அதைப் ப்ற்றி க்வலைப்படாமல், 'ஒளி வேக' வாகனத்தை எடுத்துக்கொண்டு அடுத்த கோள் நோக்கிச் சென்றுவிடுவார்கள்.

நமது காட்டுப்பகுதிகளில் இன்னும் வேட்டையாடி உணவு உண்டு கொண்டு இருக்கும் மிகவும் பின்தங்கிய சமூகத்தினரை நம்முடைய இந்தக் கால தொழில்நுட்ப அறிஞர்கள் சந்திக்க நேர்ந்தால் என்ன செய்வார்கள்? இந்தப் பாமரர்களால் தமக்கு எந்தப் பிரயோசனமும் இருக்காது என்று கண்டு கொள்ளாமல் சென்று விடுவார்கள் அல்லவா? அதுபோல நம் நாடுகளுக்குள் நடக்கும் போர் மற்றும் மதம், இனம், மொழி என்ற பெயரால் நடக்கும் படுகொலைகளையும் காணும் சூப்பர் மனிதர்கள் பூமியில் வாழும் இவர்கள் 'மனிதன் என்னும் போர்வையில் வாழும் மிருகங்கள்' என்று அறிந்து, இனி இந்தப் பக்கம் தலைவைத்துக்கூட படுக்காமல் இருக்கவும் வாய்ப்புண்டு.

(17ஆம் பக்கம் பார்க்க)

**காட்டுப்பகுதிகளில் வேட்டையாடி உணவு உண்டு கொண்டு இருக்கும் மிகவும் பின்தங்கிய சமூகத்தினரை நம்முடைய இந்தக் கால தொழில்நுட்ப அறிஞர்கள் சந்திக்க நேர்ந்தால் என்ன செய்வார்கள்? இந்தப் பாமரர்களால் தமக்கு எந்தப் பிரயோசனமும் இருக்காது என்று கண்டுகொள்ளாமல் சென்றுவிடுவார்கள் அல்லவா? அதுபோல நம் நாடுகளுக்குள் நடக்கும் போர் மற்றும் மதம், இனம், மொழி என்ற பெயரால் நடக்கும் படுகொலைகளையும் காணும் சூப்பர் மனிதர்கள் பூமியில் வாழும் இவர்கள் 'மனிதன் என்னும் போர்வையில் வாழும் மிருகங்கள்' என்று அறிந்து, இனி இந்தப் பக்கம் தலைவைத்துக்கூட படுக்காமல் இருக்கவும் வாய்ப்புண்டு.**

- ஜெயச்சந்திரன்

# சிறுமிகள் மீதான துஷ்பிரயோகம்

# வயது முதிர்ந்தவர்களே ஈடுபடுகின்றனர்

**- பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி -**

(வடமராட்சி)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வருடம் 6 சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்ற நிலையில், வயது முதிர்ந்தவர்களே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். பிரித்தவுஸ் தெரிவித்தார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களில் கூடுதலாக பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள், வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்ந்துவரும் நிலையில், அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கில் முன்வந்து அவர்களின் பிள்ளைகள் மீது பாலியல் துஷ்பிரயோகங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் ஒருவர் மட்டுமல்ல ஒரு சமூகமே பாதிக்கப்பட்டு இளம் சமூகமே கேள்விக்குறியாகும் நிலை காணப்படுகிறது.

இச்சம்பவங்கள் ஏன் இப்படி நடைபெறுகிறது என பார்த்தால் வீட்டில் இளம் பெண்பிள்ளைகளை பாதுகாவலர் தவிர்ந்து ஏனையவர்கள் மீது நம்பிக்கை வைத்து விட்டிட்டு செல்வதாலும பொழுது போக்குக்காக தொலைக்காட்சி, தொலைபேசி பாவனை, திடீர் இனம்புரியாதவர்களின் அநாவசியமற்ற கலந்துரையாடல், இரவு நேரப் பயணம் போன்ற காரணிகளால் இவ்வாறான துரதிஷ்டமான சம்பவங்கள் நடைபெறுகிறன..

எனவே இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதைத் தவிர்க்க பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர், ஆசிரியர்கள், சமூக நலன்சார் கிராம மட்ட அமைப்பினர், தாமாகவே முன்வந்து தங்களாலான முயற்சிகளை மேற்கொள்வதுடன், கிராம மட்ட சிவில் பாதுகாப்புக் குழுவினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கிராம அலுவலர்கள் ஊடாகச் சென்று ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

மேலும் சிறுபெண் மீதான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் உளவியல் தாக்கம் போன்றவற்றுக்கு தீர்வினையும், சட்டநடவடிக்கையும் மேற்கொள்வதற்கு சிறுபெண்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பருத்தித்துறை பொலிஸாரினால் ஒவ்வொரு பாடசாலைகளிலும் முறைப்பாட்டுப்பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்திற்கு வரத் தயக்கம் காட்டுவோர் இரகசியமான முறையிலும் மாணவர்கள் தமது கல்வி, வாழ்வில் ஏற்பட்டுவரும் பிரச்சினைகளை கடிதம் மூலமும் பெட்டியில் இடமுடியும். இதன்மூலம் இது தொடர்பாக இரகசியமான முறையில் விசாரணைகளை மேற்கொண்டு தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஏதுவாக அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)



**வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றத்தின் பொங்கல் விழா வல்வெட்டித்துறை மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்றபோது மன்ற உறுப்பினர்கள் பொங்கல் பொங்கி சூரிய வழிபாட்டை மேற்கொள்வதைக் காணலாம்.**

# வடக்கில் வாழ்வின் எழுச்சி இலக்கு நோக்கிய பயணம்

(நேற்றைய தொடர்ச்சி...)

2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி 4 ஆம் கட்ட ஆரம்ப நிகழ்வின் பொருட்டு யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் 187,667 மரக்கறி விதைப் பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை வழங்கப்பட்ட விதைப் பைக்கற்றுக்களில் தக்காளி, கத்தரி, புடோல், கறிமிளகாய், பயிற்றை, பாகல், வெண்டி போன்றன உள்ளடங்கியுள்ளது. மேலும் மரங்களைப் பொறுத்தவரை 50,940 முருங்கை மரங்களும், 11,250 மாதுளை, 8093 தேசி, 7631 கொய்யா, 7050 அம்பிறளாங், 3,551 பப்பாசிகன்றுகள் மற்றும் மரமுந்திரிகை 6800 கன்றுகளும் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளன. தென்னங்கன்று விநியோகம் தொடர்பாக 43,500 குடும்பங்களுக்கு 2 தென்னம்பிள்ளைகள் என்ற அடிப்படையில் 87,000 தென்னம்பிள்ளைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேலும் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் 2,400 தென்னம்பிள்ளைகள் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் யாழ்.மாவட்ட இலக் கிற்கமைவாக 124,188 தென்னம்பிள்ளைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக கட்டம் கட்டமாக இலவசமாக விநியோகிக்கப்படும் மரக்கறி விதைகள் காரணமாக சாதக, பாதக விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. வீட்டுத் தோட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மரக்கறி உற்பத்தி அதிகரித்து மரக்கறி விலைகள் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியதுடன், உணவு கொள்வனவுக்கான மக்களின் செலவு படிப்படியாக குறைவடைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் விதைப் பைக்கற்றுகள் இலவசமாக வழங்கப்பட்டதன் பிற்பாடு மக்களும் ஆர்வமாக வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளதுடன் இரசாயன, கிருமிநாசினிகள் கலவாத உடன் உற்பத்திப் பொருட்களை மக்கள் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. இந்நிலைமையானது மக்களின் போசாக்கு தன்மையை அதிகரிக்க




உதவுகின்றது. மரக்கறிகளில் ஏற்படும் தொடர் விலை வீழ்ச்சியின்பின் விவசாயிகள் ஏனைய பயிர் உற்பத்திகளில் நாட்டம் கொள்வதானது அண்மைக் காலமாக அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

## இதுவரை கடந்து சென்றவை

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் மற்றுமொரு இலக்காக மக்களின் போசாக்கு நிலையை மேம்படுத்துதல் என்பதற்கமைவாக நாடுமுழுவதும் ஒரு குடும்பத்திற்கு 10 கோழிக்குஞ்சுகள், கூடுகள் என்பன இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் முதற்கட்டமாக மொத்தம் 200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு 1 குடும்பத்திற்கு 10 கோழிக்குஞ்சுகளும், கூடும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 ஆம் கட்டமாக 1,300 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டமானது நாடு முழுவதும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதனால் கோழி முட்டைகளின் விலைகள் அதிகரித்துச் செல்லாமல் மிகை உற்பத்திகளின் காரணமாக குறைவு நிலை ஏற்பட்டுள்ளதை காணலாம். மேலும் முட்டைகளின் விலைகள் குறைவடையும் அதேநேரம், போசாக்கினை அதிகரிக்கும் நோக்குடன் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பால், முட்டை விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிட முடியும். (தொடரும்...)

# ஆயுர்வேதம்



## சிறுநீர்த் தொற்றுக்குத் தீர்வு!

சிறுநீர்த் தொற்று ஏற்பட்டால் PUS CELLS உற்பத்தியாகி இரவு நேரத்தில் பலமுறை சிறுநீர் கழிக்க வேண்டி வரும். ஒவ்வொரு முறை சிறுநீர் கழித்த பின்னரும் சிறுநீர் முழுவதுமாக அகலாமல், சில சொட்டுகளே சிறுநீர் பிரியும். இந்த உபாதை மாற வழி உண்டு.

ஆற்று தர்ப்பை, நாணல், சம்பா நெற்பயிரின் வேர், தர்ப்பைப் புல், கரும்பு வேர் ஆகியவை சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் கிருமித் தொற்று உபாதையை அழித்து, நீர்க்கடுப்பை அகற்றி, சிறுநீரைத் தாராளமாகப் பிரித்து வெளியேற்றும் ஆற்றல் உடையவை. இந்த ஐந்து மருந்துகளின் சேர்க்கைக்கு "த்ருண பஞ்சமூலம்" என்று பெயர். கிராமப் பகுதிகளில் இவை கிடைக்கக்கூடும். நகரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு இவற்றைச் சேகரித்து, தண்ணீரில் வேக வைத்துக் குடிக்கப் பொறுமையில்லை. நேரமுமில்லை என்பதால் இவற்றைத் தயாரித்து விற்கும் மருந்துக் கம்பெனிகளின் துணையை நாட வேண்டியுள்ளது. "சுகுமாரம்க்ருதம்" என்ற பெயரில் விற்கப்படும் நெய் மருந்தை ஒன்றிரண்டு கரண்டி அதாவது சுமார் 5 -10 மி.லீ. உருக்கி காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர் நல்லது.

முட்டை வடிவில் உள்ள பார்லி சாப்பிடுவதும் நல்லது. இதன் முழு அரிசியைக் கஞ்சியாக்கி அதன் தெளிவை காலையில் பருகலாம். மோருடன் சேர்த்துப் பருகினால், சிறுநீரை அதிக அளவில் பெருக்கி வெளியேற்றும். கிருமித் தொற்றும் இதன் மூலம் விலகுவதால் இரவில் அடிக்கடி சிறுநீர் போகும் உபாதை குறையும். அதுபோல, காராமணியைச் சுண்டலாகச் சாப்பிடுவதால், அது சிறுநீரை நன்றாக வெளியேற்றும். கொள்ளை 10 பங்கு தண்ணீரில் நீர்த்த கஞ்சியாக்கி இந்துப்பு சேர்த்துச் சாப்பிட, சிறுநீரகங்களின் உள்ளே புகுந்து, அங்குள்ள கற்கள், கிருமித் தொற்று போன்றவற்றைச் சுரண்டி வெளியாக்கும். அதுபோல, பசளைக் கீரையை உணவில் அடிக்கடி சாப்பிட்டு வர, நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, இன்ஃபெக்ஷன் ஆகியவற்றைப் போக்கும். சுரைக்காய், சிறுநீரக உபாதைகளில் ஏற்படும் பல உபாதைகளை நீக்கக் கூடியது. பழங்களில் நாவல்பழம் சாப்பிட நல்லது. பீர்க்கங்காய் துவையலும் நல்லது.

பொது இடங்களிலுள்ள கழிப்பிடங்களில் சிறுநீர் போவதை தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு முறை சிறுநீர் கழித்த பிறகு, அது வெளியேறும் துவாரத்தைச் சுத்தமான தண்ணீரால் கழுவிக் கொள்வது நல்லது. வெள்ளரி விதையை மண்பானைத் தண்ணீரில் ஊற வைத்து, நன்றாக ஊறியதும் அந்தத் தண்ணீரைக் குடிப்பதால், வாய்ப்புண், சிறுநீர் கல்லடைப்பு, நீர்த்துவார வெடிப்பு, சதை அடைப்பு, நீர்ச்சுருக்கு இவற்றைப் போக்கிப் பலம் தரும். இதுபோலவே, நெருஞ்சில் விதையையும் ஊறப்போட்டுச் சாப்பிடுவது நல்லதே.

சாதாரண பசு நெய்யை உருக்கி, சுமார் 10 மி.லீ. உணவுக்கு முன்பு ஒரு தரம், உணவு சமிபாடடைந்தவுடன் அதே அளவில் ஒரு தரமும் சாப்பிடுவதால், பல சிறுநீரக உபாதைகளை நாம் குணப்படுத்தலாம் என்று ஆயுர்வேதம் கூறுகிறது. வஸ்தியாமயாந்தகம் கிருதம் எனும் நெய் மருந்தை இதுபோல உபயோகிப்பதும் சிறந்தது. பிருகத்யாதி கஷாயம் 15 மி.லீ. எடுத்து 60 மி.லீ. வெதுவெதுப்பான தண்ணீரில் கலந்து காலை, மாலை வெறும் வயிற்றில் சுமார் 48 நாட்கள் தொடர்ந்து சாப்பிட, சிறுநீர் நன்றாக இறங்கும். அதன் பாதையைச் சுத்தமாக்கும்.

தசமூலஹரீதகீ எனும் லேகியம் காலை, இரவு உணவுக்கு முன் 10 கிராம் வரை நக்கிச் சாப்பிடலாம். இப்படி பல மருந்துகள் இருந்தாலும், எதை எப்படிச் சாப்பிட்டால் சரியாகும் என்பதை ஓர் ஆயுர்வேத மருத்துவரால் மட்டுமே கூறமுடியும் என்பதால், மருத்துவரின் ஆலோசனையை நாடி அதன்படி செயற்படுவதே நல்லது.

# ரிசானாவின் மரணதண்டனை விவகாரம்; அரசியல் நலனுக்கு பயன்படுத்த வேண்டாம்

## அமைச்சர் டிலான்

(கொழும்பு)

ரிசானாவின் மரண தண்டனை விவகாரத்தை குறுகிய அரசியல் நலனுக்கு பயன்படுத்த வேண்டாமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இராஜதந்திர மற்றும் மனிதாபிமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், ரிசானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுவிட்டது.

ஷரிஆ சட்டத்தின்படி குற்றம் செய்தவருக்கு ஒரு வருடத்துக்குள் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் எனவும



அமைச்சர் டிலான் பெரேரா சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒருவரின் கருத்தை விமர்சித்த பெரேரா, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம, பிரதியமைச்சர் ஹுஸைன் பைலா, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா றியாத் ஆளுநர், நீதி அமைச்சர் ஹக்கீம், சவூதியிலிருந்த அமெரிக்க, ஓமான் தூதுவர்கள் மற்றும் பல மார்க்க அறிஞர்களுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ரிசானாவின் உயிரைக் காப்பாற்றும்படி சவுதி மன்னரிடம் கேட்டிருந்தனர்.

இருந்தும், இறந்த குழந்தையின் தாய், ரிசானா இறக்க வேணடு மென்பதில் பிடிவாதமாக இருந்தார். இதனால் இவர் சவூதி மன்னர் கேட்டும் கூட மன்னிப்பை வழஙகவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# செயற்குழுக் கூட்டத்தில் சஜித்துக்கு அனுமதியில்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது அதில் பங்குகொள்ள அதன் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனாலேயே புதிய பிரதித் தலைவர் தெரிவு பிற்போடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கட்சியின் உப தலைவராக ஜோசப் மைக்கல் பெரேராவும் தேசிய அமைப்பாளராக தயா கமகேவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முரசின் இன்றைய பலன்

(23.01.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் தை 10 ஆம் திகதி. நட்சத்திரம் ரோகிணி காலை 8.36 வரை. திதி துவாதசி பின்னிரவு 5.59 வரை.
இராகுகாலம் 12.36 - 2.06 வரை.
சுபநேரம் 5.06 - 06.36 வரை. சித்தம்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தகுதி, திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். செயல்களில் வெற்றி. தொழில், நண்பரின் உதவியால் முன்னேற்றம். பணவரவும், நன்மையும். சுபநிகழ்ச்சி அழைப்பு. வெல்லும் நாள். |
| ரிஷபம் | மனதில் உற்சாகம். புதிய இடத்திலிருந்து உதவி. தொழில், கூடுதல் மூலதனம். கடன் மீளும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு. சிக்கல் ஒன்று தீரும். பழைய நினைவுகள். அமைதி. |
| மிதுனம் | பகை அறிந்து விலக நன்மை. நண்பரிடமிருந்து உதவி. தொழில், வளர்ச்சி. சேமிப்பு செலவுக்கு பயன்படும். 'பொது நல ஆர்வம். மற்றவர் சிரமம் குறைப்பீர்கள். மாணவர் தேர்ச்சி. |
| கடகம் | சிலரது பேச்சு கோபப்படுத்தும். பெருந்தன்மை நல்லது. தொழில், கூடுதல் பணிச்சுமை. எதிர்பார்த்த படி பணவரவு. அரச உதவி. தேவைகள் பூர்த்தியாகும். நண்பருடன் மன வருத்தம். |
| சிம்மம் | இலட்சிய மனதுடன் செயல்படுவீர்கள். உழைப்பில் ஆர்வம். தொழில், அபிவிருத்தி. உபரி வருமானம். குடும்பத்தினர் விரும்பியது செய்வீர்கள். சுப செய்தி வரும். சாதனை நாள். |
| கன்னி | பிறர் புகழவேண்டும் என்ற எதிர்பார்ப்பு. குடும்பத்தில், விவாதம் வேண்டாம். தொழில், மாறுபட்ட சூழல். கடன் பெறுவீர்கள். நிர்ப்பந்தத்தால் எதையும் வாங்க வேண்டாம். புகழ் வரும். |
| துலாம் | சுயதிறமையை வளர்ப்பீர்கள். உலக நடப்புகளை அறிவதில் ஆர்வம். தொழில், செழிப்பு. வரவில் முன்னேற்றம். சொத்து வாங்க திட்டம். பணிவால் அனைவரையும் கவர்வீர்கள். |
| விருச்சிகம் | குடும்பம் பெருமைப்பட செயற்படுவீர்கள். மனதில் இருந்த சஞ்சலம் தீரும். தொழில், அபிவிருத்தி. ஆதாய பணவரவு. சேமிப்பீர்கள். உடல் நலம் பெறும். வெளியூர் நற்செய்தி. |
| தனுசு | தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரும். குடும்ப ஆலோசனை உதவும். தொழில், அதிக கவனம் தேவை. வரவுக்கேற்ற செலவு. உடல்நலத்திற்கு உணவில் கவனம். வாகன திருத்தம். |
| மகரம் | இனிய எண்ணங்கள். மனதில் உற்சாகம். உறவினர், நண்பருக்கு முழுந்தவரை உதவி. தொழில், இடையூறு விலகும். சேமிக்கும் அளவில் வருமானம். நட்பு, விருந்து, உபசரிப்பு. |
| கும்பம் | ஞாபகமறதியினால் பணி தாமதம். திறமைக்கு நன்மை கிடைக்கும். தொழில், சராசரி. குறைந்த வரவு. உறவினர் வகையில் செலவு. உறவுகளை அனுசரித்துப் போகவும். |
| மீனம் | உங்களுக்கு சிலர் இடையூறு செய்வர். செயல்களில் தற்காப்பு. தொழில், இலக்கு நிறைவேறும். குறைந்த பணவரவு. தியானம், வழிபாட்டால் மன அமைதி. உடல்நலத்தில் கவனம். |

# விபத்தில் மூவர் பலி

தமிழ்நாடு - புதுவை அனுக்சை கிராமம் அருகே இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கை அகதி முகாமைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அஜன் (வயது -21), சாருஹஜன் (வயது -20), சதீஷ் (வயது -24) ஆகிய மூவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்டட வேலை செய்யும் இவாகள் வேலை முடிந்து மாலையில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் இரசாயன பொருள் கொண்டு செல்லும் பவுசருடன் நேருக்குநேர் மோதிக் கொண்டதால் இவ் விபரீதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# திருமணப் பதிவு; கட்டணம் வேண்டாம்

(கொழும்பு)

திருமணப் பதிவிற்கென புதிதாக அறவிடப்படும் பணத்தை ஆதிவாசிகளிடம் அறவிடக் கூடாது என ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலே எத்தோ கோரிக்கை விடுததுள்ளார்.

திருமணப் பதிவிற்காக புதிதாக 5000 ரூபா அறவிடப்படுகின்றமை காட்டில், விவசாயத்தை நம்பி வாழும் ஆதிவாசிகளால் தாங்கிக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சந்ததியினருக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்வது, பாடசாலையில் சேர்ப்பது போன்றவற்றில் ஏற்படும் பிரச்சினை காரணமாக திருமணப்பதிவு செய்து கொள்ளப் படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கடல் கொந்தளிப்பால் அகதிகள் குறைவு

அவுஸ்ரேலிய கடற்பகுதியில் காணப்படும் கொந்தளிப்புக் காரணமாக கடந்த சில நாட்களாக அந் நாட்டுக்குள் செல்லும் சட்ட விரோத அகதிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் 300 அகதிகள் அவுஸ்ரேலியாவுக்கு சென்றனர். அந்த ஆண்டில் மாத்திரம் மொத்தமாக 17,202 அகதிகள் அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாக சென்றுள்ளனர். எனினும் 2013 ஜனவரியில் 188 அகதிகள் படகுகள் மூலம் சென்றுள்ளனர்.

இதற்கிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று 65 அகதிகளை ஏற்றிய இரண்டு படகுகள் அவுஸ்ரேலிய அதிகாரிகளால் வழிமறிக்கப்பட்டன.

இந்த அகதிகள் தற்போது கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

# உணவு விடுதியை தாக்கிய மூவர் சுவிஸில் கைது

சுவிஸ்சர்லாந்தின் தலைநகர் சூரிசில் உள்ள இலங்கையரின் உணவு விடுதிக்கு சேதம் ஏற்படுத்தி உரிமையாளரையும் தாக்கிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் மது போதையில் உணவு விடுதியையும் உரிமையாளரையும் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

4,700 பேர் வசிக்கும் சூரிசில் உள்ள பிரதேசம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த தாக்குதலின் போது உணவு விடுதியின் உரிமையாளரான இலங்கையர் சிறு காயங்களிற்கு உட்பட்டதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட இலங்கையர் 34 வயதான இப்ராஹிம் என அந்நாட்டு ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன. தாக்குதலின் பின்னர் அவர்கள் அடுத்தமுறை கொலை செய்வோம் என உணவு விடுதி உரிமையாளருக்கு கூறிச் சென்றுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் சூரிச், பேர்ன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அந்நாட்டு பொலிஸ் தெரிவித்துள்ளது.

## பரமர் சங்கமம்



"மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இம் மூன்று ஆசைகளுமே உலகினை ஆட்டிப் படைக்கிறதெனச் சொல்லி வைத்தனர் நம் முன்னோர்.

இந்த ஆசைகள் தனியே ஆண்பாலாருக்கு மட்டும் என்றில்லாமல் இருபாலாருக்கும் பொதுவானதென்றும் கொள்ள வேண்டும்.

மேலோட்டமாகப் பார்க்கையில் அப்படிப் பட்டாலும் "பெண்ணாசை" என்னும் பதத்தைத் தனியாக அழுத்திப் பார்த்தால் அவர்களது ஆசையையும் சுட்டி நிற்பதைப் பார்க்கலாம்.

இல்லாமலும் மண்ணுக்கும் பொன்னுக்கும்கூட மாந்தர்களின் ஈடாட்டத்தைச் சோதித்துப் பார்க்கும் ஆசை உண்டென்பதையும் அவதானிக்கலாம்.

மண்ணாசையால் நாடுகளும், இனங்களும் ஒண்டுக்கொண்டு போர் தொடுத்து மாண்ட வரலாறுகள் அனந்தம். அதேவேளை, சாதாரணிகள் எல்லைச் சண்டை, வேலிச்சண்டை போட்டுக் கொண்டு வெட்டுப்பட்டுக் குத்துப்பட்டு கோடு, கச்சேரி ஏறி இறங்குவதையும் பாக்கிறோம்.

பொன்னாசையாலும் இந்நிலைமைதான். இரண்டு மாதங்களுக்கு முன்பு கொழும்பு தமிழ் வர்த்தகர் ஒருவர் அவரது நெருங்கிய முஸ்லிம் நண்பனொருவரால் கடத்திக் கொல்லப்பட்ட புதினங்களைப் பத்திரிகைகளில் வாசித்து அறிந்தோம்.

பெண்ணாசையால் பெரிய பெரிய சாம்ராஜ்ஜியங்களே கவிழ்ந்ததும் கதை கதையாக உள்ளன. அந்த வகையில் மிகப் பிரபலமானதாகவும், இன்டைக்கும் நாளா வட்டம் நடந்து வருவதாகவும் இந்தப் பெண்ணாசை திகழ்கிறதென்றால் மிகையில்லை அல்லவா?

இந்திய டெல்லி நகரில் ஓடும்பேருந்தில் வைத்து மருத்துவ மாணவி ஒருவர் ஆறு பேர்கள் கொண்ட குழுவால் மிருகத்தனமான பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி, பேருந்தால் தூக்கி வீசப்பட்ட சங்கதி சமீபத்தில் செய்திகளில் முதன்மை இடத்தை வகிக்கிறது.

அச்செய்தி பரவிய வேக்த்துடன் மேலும் பல பாலியல் சம்பந்தமான செய்திகள் இன்றைய செய்தித் தாள்களில் கூட வாசிக்கக் கூடியதாக இருப்பதை எதற்கொப்பிடுவது?

பாலியல் குற்றம் செய்தவர்களின் ஆண்மையை அகற்றுதல் ஒரு தண்டனையாகவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் சட்டம் ஒன்றை உருவாக்கி அதற்கு அந்த மருத்துவ மாணவியின் பெயரைச் சூட்டச் சொல்லப்பட்டுள்ளது.

இதனிடையே இரு சகோதரிகள் ஒரு ஆணை தமது இச்சைக்குப் பயன்படுத்தியமையைப் படங்கள் பிடித்து சினேகிதிகளுக்கு காட்டி மகிழ்ந்ததாகவும், பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் கூட அறிந்தோம்.

நமது குடாநாட்டில் சமீபத்தில் மண்டைதீவில் நான்கு வயதுப் பாலகியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொன்று கிணற்றில் போட்ட தகவல்களும் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பவற்றில் பெண்ணாசைதான் தூக்கலாக இருப்பதைக் காட்டுகிறதில்லையா சொல்லுங்க பாப்பம்...

10) பின்வரும் தலைப்புக்களின் ஒன்றைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களேனும் இருத்தல் வேண்டும்)

1) எனது பொழுது போக்கு 2) நான் சென்ற கல்விச் சுற்றுலா

1) ....................................................................................................

2) ....................................................................................................

3) ....................................................................................................

4) ....................................................................................................

5) ....................................................................................................

11) பின்வரும் கவிதைகளை வாசித்து விடை தருக

தேனிருக்கும் இடத்தினைத்
தேடிமொய்க்கும் வண்டுபோல
சீனியுள்ள இடத்தைத்
தேடி ஊரும் எறும்புபோல்

பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியைப் போல
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள் போல்

1) இக்கவிதைகளில் வரும் பிராணிகள் எவை? ..............................................

2) 'பழங்கள்' என்பதன் ஒருமைச்செல் எது? ..............................................

3) 'ஓலை' என்பதன் ஒத்திசைக்கும் சொல் எது? ..............................................

4) பழம் நிறைந்த சோலையை நாடிச் செல்வது எது? ..............................................

5) 'காடு' என்பதன் எதிர்ச்சொல் எது? ..............................................

6) 'தேனிருக்கும்' என்பதை பிரித்து எழுதுக ..............................................

7) மக்கள் நாடிச் செல்லும் இடம் எது? ..............................................

12) பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்

| ஒருமைச் சொல் | பன்மைச்சொல் |
|---|---|
| 1) குமிழி | .............................. |
| 2) .............................. | பூக்கள் |
| 3) அலை | .............................. |
| 4) .............................. | செடிகள் |
| 5) விளிம்பு | .............................. |



## தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை -2013

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

01) சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) சுற்றம் : முற்றம் போல் - கன்று : ..........................
   1) குட்டி 2) பிள்ளை 3) நன்று

2) பதம் : பாதம் போல கலம் : ..........................
   1) களம் 2) காளம் 3) காலம்

3) பின்வரும் கவிதையில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

   .......................... செல்வோம். 1) பாடசாலை
   நூல்கள் பல படிப்போம். 2) கடை
   பத்திரிகைகள் வாசிப்போம் 3) நூலகம்
   செய்திகளை அறிவோம்.

4) பின்வரும் கவிதையில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

   ரொட்டி ரொட்டி ரொட்டியாம். 1) கையிலே
   வெட்டி வெட்டி வெண்ணெயில் 2) வாயிலே
   தொட்டுத் தொட்டு .......................... 3) பையிலே
   பிட்டுப் பிட்டு போடலாம்.

5) இன்சொல் பேசுவோம். இதில் 'இன்சொல்' என்பதன் எதிர்ச்சொல் எது?
   1) இனிமையான சொல் 2) வன்சொல் 3) நல்லசொல்

6) பின்வருவனவற்றுள் நற்பழக்கமாக அமையாதது எது?
   1) உண்மை உரைப்போம் 2) பிராணிகளைக் கொல்வோம் 3) முதியோருக்கு உதவுவோம்

7) தேனிருக்குமிடம் - வண்டுபோல : சீனியுள்ள இடம் ..........................
   1) எறும்பு 2) தேனீ 3) வீட்டு ஈக்கள்

8) திருக்குறளை இயற்றிய புலவர் யார்?
   1) ஔவையார் 2) திருவள்ளுவர் 3) பாரதியார்

9) கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று
   1) எல்லே 2) கிளித்தட்டு 3) வொலிபோல்

10) ஐந்து பேர் கிளித்தட்டு விளையாட எத்தனை கட்டங்கள் கீற வேண்டும்?
   1) நான்கு 2) ஆறு 3) எட்டு

02) பின்வரும் சுயவிபரப் படிவத்தை நிரப்புங்கள்

1) எனது முழுப்பெயர் : ..............................................................................

2) எனது தந்தையின் பெயர் : ..............................................................................

3) எனது முகவரி : ..........................................

4) தொலைபேசி இலக்கம் : ..........................................

5) பால் : ..........................................

6) பிறந்த திகதி : ..........................................

7) கற்கும் தரம் : ..........................................

8. கற்கும் பாடசாலை : ..........................................

.......................... ..........................

திகதி மாணவரின் கையொப்பம்

03) பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்

| சேர்த்து எழுதுதல் | பிரித்து எழுதுதல் |
|---|---|
| 1) இன்சொல் | 1) .......................... |
| 2) .......................... | 2) வாழை + படம் |
| 3) தபாற்பெட்டி | 3) .......................... |
| 4) .......................... | 4) கடல் + கரை |
| 5) அறிவுரை | 5) .......................... |
| 6) .......................... | 6) முள் + செடி |

04) எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக்குங்கள்

1) சிச்மழ்கி : .......................... 4) திமுரைத் : ..........................

2) டசாபாலை : .......................... 5) பாதகலம் : ..........................

3) டிகரம்கா : .......................... 6) சிரஆயரி : ..........................

05) பொருத்தமான முடிக்கும் சொல்லை இணையுங்கள்

| | |
|---|---|
| 1) பழங்கள் | 1) மேய்ந்தது |
| 2) குயில் | 2) ஓடினாள் |
| 3) நாங்கள் | 3) கூவியது |
| 4) அவள் | 4) பழுத்தன |
| 5) பசு | 5) வந்தோம் |



06) ஒத்தகருத்தைத் தரும் சொல்லின் கீழ் கோடிடுக

1) சூரியன் (பகலவன் / அம்புலி / விகடன்)

2) வீடு (இல்லம் / கூடாரம் / பொய்கை)

3) உடல் (சத்தியம் / மேனி / பொய்)

4) தகப்பன் (பாதுகாவலர் / தலைவன் / தந்தை

5) ஆதவல் (செய்தி / விடயம் / புதினத்தாள்)

07) பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்

| ஒத்தகருத்துத் தரும் சொல் | எதிர்க்கருத்தைத் தரும் சொல் |
|---|---|
| 1) தர்மம் | .......................... |
| 2) .......................... | துன்பம் |
| 3) இளமை | .......................... |
| 4) .......................... | கனி |
| 5) இன்சொல் | .......................... |

08) பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.

1) உயிர்கள் மீது .......................... காட்டுவோம்

2) .......................... காய்கறிகள் வாங்குவோம்.

3) பள்ளமான இடத்தை நாடி .......................... பாயும்.

4) .......................... இரண்டு வரிகளைக் கொண்டது.

5) காகத்திற்கு நரியின் .......................... புரிந்து விட்டது.

| |
|---|
| வெள்ளம் |
| சந்தையில் |
| தந்திரம் |
| குறட்பாக்கள் |
| கருணை |

09) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக

1) முத்திரை : ..........................

2) உண்மை : ..........................

3) ஒலி : ..........................

4) விழா : ..........................

5) அலை : ..........................

# உரவிலையை குறைக்க வலியுறுத்தல்; பிரதமரை அடிக்க வேண்டி வரும்

## முதல்வர் மம்தா



உரவிலையை குறைக்க வலியுறுத்தி இதுவரை 10 முறை பிரதமரை சந்தித்தும் எந்த பிரயோசனமும் இல்லை. இனி பிரதமரை சந்தித்தால் ரவுடியாக மாறி அவரை அடிக்க வேண்டி வரும் என மேற்கு வங்க முதல்வர் மம்தா ஆவேசமாக பேசியுள்ளார்.

மத்திய அரசிடமிருந்து கடந்த செப்ரெம்பர் மாதம் விலகியது திரிணாமுல் காங்கிரஸ் இதையடுத்து காங். கட்சியை விமர்சனம் செய்து வந்தார் முதல்வர் மம்தா பானர்ஜி.

கானிங் நகரில் அவர் பேசுகையில் மத்திய அரசில் இருந்து விலகும் முன் சமையல் கேஸ் சிலிண்டர் எண்ணிக்கை, அந்நிய நேரடி முதலீடு, உர விலை குறித்து பிரதமர் மன்மோகன்சிங்கை நான் 10 இற்கும். மேற்பட்ட முறை சந்தித்து வலியுறுத்தினேன்.

பின்னர் டில்லியில் எனது கட்சி எம்.பி.க்களுடன் ஆர்ப்பாட்டமும் நடத்தினேன். ஆனால் அவரிடமிருந்து எந்த பதிலும் இல்லை. இனி நான் ரவுடியாக மாறி அடிக்க வேண்டி வரும் என தெரிவித்துள்ளார்.

அந்த அளவிற்கு என்னை கோபக்காரியாக மாற்றிவிட்டார் பிரதமர் மன்மோகன்சிங். இனி மேற்குவங்க மக்களுக்காக டிலலி வீதிகளில் தொடர் போராட்டம் நடத்தப்போகிறேன்.

தற்போது மாநிலத்தில் தேர்தல் வாக்குறுதியை திரிணாமுல் காங்கிரஸ் அரசு முடிந்தவரை நிறைவேற்றி வருகிறது என மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.



புதுடில்லியில் சென்ற மாதம் பேருந்தில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு தாக்கப்பட்டு பின்னர் இறந்து போன மாணவியின் மரணம் தொடர்பான வழக்கு ஆரம்பித்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஐந்து பேர், விசேடமாக அமைக்கப்பட்டுள்ள விரைவு நீதிமன்றம் ஒன்றின் முன்னால் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். ஆறாவது நபர், இளம் பிராயத்தாருக்கான நீதிமன்றத்தில் வைத்து விசாரிக்கப்படவுள்ளார்.

# கருணாநிதியுடன் அழகிரி இரகசிய சந்திப்பு



தி.மு.க. தலைவர் கருணாநிதியை அவரது மகனும் மத்திய அமைச்சருமான அழகிரி நேற்றுக காலை சந்தித்து பேசினார்.

சென்னை கோபாலபுரத்தில் உள்ள கருணாநிதியின் வீட்டுக்கு காலை 10.45 மணியளவில் அழகிரி தனது மகன் தயாநிதியுடன் வந்தார். கருணாநிதியும், அழகிரியும் 12 மணி வரை பேசியதாக தகவல்கள் வந்துள்ளன.

இச்சந்திப்பில் வேறு யாரும் உடனிருக்க அனுமதிக்கப்பட்வில்லை, சந்திப்புக்குப்பின் நிருபர்களிடம் பேசிய அழகிரி, இதில் சொல்வதற்கு ஒன்றுமில்லை என்று கூறிவிட்டு சென்றுவிட்டார்.

# ஆசிரியர் நியமன ஊழல் வழக்கில் முன்னாள் முதல்வருக்கு 10 வருட சிறை



ஆசிரியர் நியமனத்தில் ஊழல செய்த வழக்கில் அரியானா முன்னாள் முதல்வர், ஓம் பிரகாஷ் சவுதாலா, அவரது மகன் அஜய் சிங் சவுதாலா ஆகியோருக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய தேசிய லோக்தளம் கட்சியை சேர்ந்தவர், ஓம்பிரகாஷ சவுதாலா 78. இவர் 2000 இல் அரியானா முதல்வராக பதவி வகித்தபோது மாநில கல்வித் துறை சார்பில் 3;206 பணியிடங்களுக்கு ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

இதில் ஊழல் நடந்ததாக புகார் எழுந்ததை அடுத்து சி.பி.ஐ. விசாரித்தது. இலஞ்சம் பெற்று பணி நியமனம் செய்ததாகவும் போலியான ஆவணங்களைத் தயாரித்ததாகவும் ஓம் பிரகாஷ் சவுதாலா அவரது மகனும் இந்திய தேசிய லோக் தளம் கட்சி எம்.எல்.ஏ.யுமான அஜய் சிங் சவுதாலா அப்போதைய ஆரம்ப கல்வித்துறை இயக்குனர் சஞ்சீவ்குமார் சவுதாலாவின் சிறப்பு அதிகாரியாக பணியாற்றிய, வித்யாதர் மற்றும் அதிகாரிகள் உட்பட 62 பேர் மீது சி.பி.ஐ. அதிகாரிகள் 2008 இல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர்.

இவர்கள் மீது இலஞ்சம் வாங்கியது மோசடி சதித் திட்டம் போலியான ஆவணங்களைத் தயாரித்தது உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

டில்லியில் உள்ள சி.பி.ஐ. நீதிமன்றில் விசாரணை நடந்தது. வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஆறு பேர் விசாரணையின் போதே இறந்து விட்டனர்.

ஒருவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார் மீதமுள்ள 55 பேர் மீதும் விசாரணை நடந்து வந்தது. இந்த வழக்கில் கடந்த வாரம் தீர்ப்பு அளிக்கப்பட்டது.


அதில் சவுதாலா முதல்வராக பதவி வகித்தபோது நியமிக்கப்பட்ட 3,206 ஆசிரியர் பணியிடங்களும் சட்ட விரோதமாக நடந்துள்ளது.

இந்த ஒட்டு மொத்த ஊழலுக்கும் அப்போதைய முதல்வர் சவுதாலா தான் காரணமாக இருந்துள்ளார்.

அவரது உத்தரவுப்படி தான் இந்த ஊழல் நடந்துள்ளது. எனவே, இந்த வழக்கின் பிரதான குற்றவாளி ஓம்பிரகாஷ் சவுதாலா தான். இந்த ஊழல் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்குமே, இந்த ஊழலில் தொடர்புள்ளது என்று தெரிவித்தார். குற்றம் உறுதி செய்யப்பட்டவர்கள் மீதான தண்டனை விபரம் 22 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் செய்தி வெளியாகியுள்ளது.

# அவதூறு வழக்கிற்கு தடை



தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மீது தொடரப்பட்ட அவதூறு வழக்கிற்கு சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

தர்மபுரியில் நடந்த பொதுக் கூட்டத்தில் முதல்வரை அவதூறாக பேசியதாக மாவட்ட நீதிமன்றத்தில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டது.

இதற்கு தடை விதிக்கக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் விஜயகாந்த் மனுத் தாக்கல் செய்தார். இதனை விசாரித்த நீதிபதி வெங்கட்ராமன், அவதூறு வழக்குக்குக்கு தடை விதித்து உத்தரவிட்டார்.

## சூப்பர் மனிதர்கள்... (12 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

சூப்பர் மனிதர்கள் பூமிக்கு வந்து, நம் நிலைமையைக் கண்டபின், இவர்களால் உபயோகமில்லை என்று தொடர்பு கொள்ளாமல் சென்று விட்டிருக்கலாம் என பலர் உறுதியாக நம்புகின்றனர். சிலரை பிடித்துக் கொண்டுபோய், மனித உடலைப் பற்றி சில ஆராய்ச்சிகளை நடத்திவிட்டுச் சென்றிருக்கலாம்.

மேற்கத்திய நாடுகளில் வாழ்ந்தவர்கள், ஆபிரிக்க கண்டத்தில் இருந்து மக்களைக் கொண்டுபோய் அடிமைகளாக வைத்துக் கொண்டது போல, நம்மைப் பிடித்துக் கொண்டு சென்று நம் உழைப்பை இனிமேல் அவர்கள் உறிஞ்ச ஆரம்பித்துவிடுவார்கள் என்று பலர் நம்புகின்றனர்.

மாபெரும் விஞ்ஞானியான ஸ்டீபன் ஹோகிங் அவர்களே இதனை ஒத்துக்கொள்கிறார். அவர்கள் நம்மைக் காணாத வரை நல்லதுதான். நாம் "வோயேஜர்" மூலமாக பிரபஞ்சத்திற்கு அனுப்பிய செய்தி தவறு எனவும் கூறுகிறார்.

பலர், சூப்பர் மனிதர்கள் அறிவியலில் மேம்பட்டிருப்பதைப் போல, மனித நேயத்திலும் உயர்ந்திருப்பார்கள் என்றும், இங்கே வந்து நம் நிலைமையைக் கண்டு, மனமிரங்கி, நம் பிரச்சினைகளைத் தீர்க்க வழி சொல்லி, பூமியில் பஞ்சமும் பட்டினியும், நோயும், மற்றும் பிரச்சினைகள் இன்றி மக்கள் ஆனந்தமாக வாழ வழி வகுப்பார்கள் என்றும் வேறு சிலர் கருதுகிறார்கள்.






அவுஸ்ரேலியாவில் மூன்று வயதுச் சிறுவனான Charlie Parker மிகச் சிறிய wildlife ranger ஆவான் இச்சிறுவன் தனது ஒரு வய்திலிருந்தே விலங்குகளுடன் பழக ஆரம்பித்து விட்டான்.

இதனால் கொடூரமான விலங்குகளை எப்படி கையாள்வது என்ற திறமையும் தானாகவே வந்துவிட்டது. முதலையும் இவன் அரவணைப்பில் வாய் திறக்காமல் இருப்பது பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சியை வழங்கி வருகிறது.

# பாகிஸ்தான் அணு ஆயுதங்களுக்கு இராணுவத்தால் தான் ஆபத்து



பாகிஸ்தானில் உள்ள அணு ஆயுதங்களுக்கு அந்நாட்டு இராணுவத்தினால் ஆபத்து உள்ளது. வெளிநாட்டு சக்திகளால் இல்லை என்று பாகிஸ்தான் அணு விஞ்ஞானி பர்வேஸ் ஹுட்பாய் தனது புத்தகத்தில் பகீர் தகவல் வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணு விஞ்ஞானி பர்வேஸ் ஹுட்பாய். இவர், கான் ஃபிரான்டிங் திபாம் என்ற தலைப்பில் புத்தகம் எழுதியுள்ளார். அதில் கூறியுள்ள பரபரப்பு விபரங்கள்:

இந்தியா மீது போர் தொடுத்து தவறு செய்யாத வரையில், பாகிஸ்தானில் உள்ள அணு ஆயுதங்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. ஆனால், பாகிஸ்தான் இராணுவத்தினராலேயே அங்குள்ள அணு ஆயுதங்களுக்கு ஆபத்து உள்ளது. அந்த ஆயுதங்களை அவரகள் கைப்பற்றும் நிலைமை ஏற்படலாம். பாகிஸ்தான் இராணுவத்தில் உள்ள சிலர் வெளியில் உள்ள தீவிரவாதிகளுடன் கைகோர்த்து அணு ஆயுதங்களை கைப்பற்ற திட்டமிடலாம்.


கடந்த 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி பாகிஸ்தான் இராணுவ தளபதியாகவும் ஆட்சியாளராகவும் இருந்த பர்வேஸ் முஷாரப், அணு ஆயுதங்களை தன்னுடைய நேரடி கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

அவற்றை இயக்கும் அதிகாரத்தையும் தன்னிடமே வைத திருந்தார். எனவே, அணு ஆயுதங்கள் விஷயத்தில் பாகிஸ்தான் அரசு எந்த கட்டுப்பாடுகளை கொண்டு வந்தாலும், அவற்றை இயக்கும் அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பது மிக முக்கியம். மேலும், அவருடைய மனநிலை, உள்நோக்கம் போன்றவற்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எனினும், அணு ஆயுதங்களை யாரும் எளிதில் பயன்படுத்த முடியாமல் தடுத்தல், விபத்து ஏற்படாமல் பாதுகாத்தல் போன்றவை தொடர்பாக அமெரிக்கா அளித்துள்ள தொழில்நுட்பம் பாகிஸ்தானிடம் உள்ளது.

பாகிஸ்தானில் 2 இராணுவம் உள்ளது. ஒன்று தளபதி பர்வேஸ் அஷரப் கயானி தலைமையில் இயங்கி வருவது. மற்றொன்று மதத்தின் பெயரால் இயங்கி வருகிறது. இவ்வாறு பர்வேஸ் ஹுட்பாய் கூறினார்.

# விமானத்தின் சில்லு கழன்று வீழ்ந்தது



எயார் கனடா ஜாஸ் விமானம் ஒன்றின் முன்புறச் சில்லுக் கழன்று விழுந்த சம்பவம் ஒன்று ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

விமானம் தரையிறங்கியதைத் தொடர்ந்து, அதன் முன்புறச் சில்லுகளில் ஒன்று கழன்று வீழ்ந்தது. எனினும், விமானத்தை விமானிகள் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

அந்த விமானத்தில் 72 பயணிகள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடு திரும்பினார் இளவரசர் ஹரி



ஆப்கானிஸ்தானில் 20 வாரகால சேவைக்கு பின்னர் நாடு திரும்பினார் இளவரசர் ஹரி.

ஆப்கானிஸ்தானில் 20 மாதமாக அபாசி ஹெலிகொப்டரில் விமானியாக பணிபுரிந்தார் இளவரசர் ஹரி.

ஆப்கானிஸ்தானில் பணிபுரியும் போது அதிகாரியாக நடந்து கொள்வது சற்று சிரமமாகவே இருந்தது என்றாலும், இப்பயணம் தனக்கு புத்துணர்ச்சியை அளித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

# இரும்புத் திரையை தளர்த்த சுவிட்ஸர்லாந்து அரசு முடிவு



இந்தியா உள்ளிட்ட மற்ற நாட்டு அரசுகள் கேட்கும் வங்கி வாடிக்கையாளர் விவரங்களை நிபந்தனைகளுக்குட்பட்டு, தர சுவிஸ்சர்லாந்து நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கு வழிசெய்யும் வரி நிர்வாக உதவிச் சட்டம், அந்நாட்டில் வரும் பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் அமுலாக உள்ளது. எனினும் கேட்கப்படும் விவரங்கள் தனிப்பட்ட நபர்களுடையதாக இல்லாமல் ஒரு குழுவாக உள்ள வாடிக்கையாளர்களின் விவரங்களாக இருக்க வேண்டும் என்ற விதிமுறையும் இந்த சட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

பல நாடுகளில் இருந்து சட்டவிரோதமாக சம்பாதித்த பணத்தைக் கொண்டு சென்று முடக்கும் சொர்க்கமாக, சுவிஸ்சர்லாந்து இருப்பதாக நீண்ட நாட்களாகவே கருதப்படுகிறது.

இவ்வாறு பதுக்கும் பணத்தின் அளவு அதிகரித்து வந்த நிலையில் இது தொடர்பான விபரங்களை தருமாறு பல நாட்டு அரசுகளும் சுவிஸ்சர்லாந்து அரசை நெருக்கத் தொடங்கின.

இதையடுத்தே அந்நாட்டு அரசு இது தொடர்பான விதிமுறைகளில் கடுமையை தளர்ததி தற்போதைய மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது.

உலகச் செய்திகள்

# இந்தோனேசியாவில் பயங்கரம் வெள்ளத்திற்கு 26 பேர் பலி

இந்தோனேசியா நாட்டின் பல பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வருகின்றது.

தலைநகர் ஜகார்தாவின் மத்திய பகுதியில் உள்ள வெள்ளத் தடுப்பு மதில்சுவர் கடந்த வியாழக்கிழமை மழை நீரில் கரைந்து சரிந்து விழுந்தது.

இதனால், ஜகர்தா நகருக்குள் வெள்ள நீர் பெருக்கெடுத்து புகுந்தது. ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட பல தாழ்வான பகுதிகளை வெள்ளம் சூழ்ந்தது.

6.5 அடிக்கும் மேற்பட்ட உயரத்தில் பாய்ந்தோடும் வெள்ள நீரில் மூழ்கியும், நீரில் மின்சாரம் பாய்ந்ததாலும் நேற்று வரை 26 பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஜகார்தா பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# பிரிட்டனில் பனிப்பொழிவு; 260 விமானங்கள் இரத்து

பிரிட்டனில் கடந்த மூன்று நாட்களாக கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது. இரவு நேர வெப்பநிலை பூச்சியம் டிகிரிக்கு குறைவாக உள்ளது.

எனவே போக்குவரத்து கடும்மையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், விமானங்கள் தரையிறங்குவதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து லண்டனில் பரபரப்பாக இயங்கும் ஹீத்ரு விமான நிலையத்தில் நேற்று முன்தினம் 260 விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

இதனால் உரிய இடங்களுக்குச் செல்ல முடியாமல் ஆயிரக்கணக்கான பயணிகள் விமான நிலையத்தில் காத்திருக்கின்றனர்.

இதேபோல ஜேர்மனியிலும் பனிப்பொழிவு அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் பிராங்பர்ட் விமான நிலையத்திலிருந்து புறப்பட வேண்டிய 292 விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

வரக்கூடிய வாரங்களில் பனி பொழிவு அதிகரிக்கும் என வானிலை மையங்கள் தெரிவித்துள்ளன. இதனால் 10 சதவீத விமான சேவையை குறைக்க ஹீத்ரு விமான நிலைய அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

# மாலி முழுவதும் எங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதே தாக்குதலின் இலட்சியம்

வடக்கு மாலியில் உள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகளை அப்புறப்படுத்த மாலி வந்து இறங்கிய பிரான்ஸ் இராணுவம் முழுமையாக இந்நாட்டை கைப்பற்றுவோம் என்று அறிவித்தது.


முன்பு மாலி பிரான்ஸின் குடியிருப்பு நாடுகளில் ஒன்றாக இருந்தது. இன்னும் சில வாரங்களில் மாலி முழுவதும் எங்களின் கட்டுபபாட்டில் கொண்டு வருவதே இத்தாக்குதலின் இலட்சியம் என்று பிரான்சின் பாதுகாப்பு அமைசசர் ஜீன் யேவ்ஸ் லீ டிரியான் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்தார்.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் மாலியின் வடபகுதியில் உள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகளை ஒழிக்க பிரான்ஸ் இராணுவத் தாக்குதலைத் தொடங்கியது. விமானத்தாக்கு தலுக்கு பயநது அங்கிருந்த அல்கொய்தா போராளிகளும் கூட்டாளிகளும் டயாபெலி நகரை விட்டு வெளியேறினர்.



பிரெஞ்சு படைகள் நியோனோ நகரத்தில் புதிய இராணுவத்தை அமைத்துள்ளது. இந்நகரம் தெற்கே 40 மைல் தொலைவில் உள்ளது நேற்று பிரெஞ்சுப் படைவீரர்கள் எவ்விதத்தாக்குதலிலும் ஈடுபாடமல் ஓய்வெடுத்தனர்.

# கிடைக்கும் உதவிகளைப் பெற்று கல்விச் செயற்பாட்டை அதிகரிக்கலாம்



(வலிகாமம்)

மாணவர்கள் தமக்கு கிடைக்கப் பெறுகின்ற உதவிகளைக் கொண்டு கல்வி மேம்பாட்டுக்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு பிர்தேச பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், சமுர்த்தி அபிவிருத்தி திட்டத்தை நாம் யாழ். குடாநாட்டில் அறிமுகப்படுத்திய போது அதன் தாற்பரியம் தெரியாத சில சுயலாப அரசியல் வாதிகள் அதனை விமர்சனம் செய்தனர். ஆனால் இன்று சமுர்த்தி திட்டத்தின் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்பாடடையச் செய்யும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சமுர்த்தி உத்தியோகத்தர்களால் புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து நெடுந்தீவுப் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் செயற்பாடு பாராட்டிற்குரிய விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் உதயனால் வழங்கி வைக்கப்பட்டது. 420 பாடசாலை மாணவர்களுக்கு இதன்போது கற்றல் உபகரணங்கள் வழங்கபபட்டது.

இந்நிகழ்வில், ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு பிரதேச இணைப்பாளரும், பிரதேச சபைத் தவிசாளருமான தானியேல் றெக்சியன் (ரஜீவ்), பாடசாலை அதிபர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மற்றும் பாடசாலை சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உக்கிரமடைகிறது டெங்கு 11 பேர் மருத்துவ மனையில்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வாரகாலப்பகுதியில் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகிய 11 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் கடந்த 19 ஆம் திகதி மூவரும் 20 ஆம் திகதி நான்கு பேரும் 21 ஆம் திகதி ஒருவரும உட்பட 11 பேர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தக் காலப் பகுதியில் தைபோயிற் (நெருப்புக் காய்ச்சல்) காய்ச்சலுக்கு இலக்காகிய எட்டுப்பேரும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்தப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும், டெங்கு நோய்களின் தாக்கம் இருந்து வருவதாகவும் தெரிவித்த அந்தப் பிரிவு பொதுமக்கள் முறைபாட்டுடன் சுகாதாரக் குறைவுக் கையாண்டு தொற்றுநோய்களில் இருந்து பாதுகாப்பாக இருக்குமாறு அந்தப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது. (பா)

## கைது செய்யப்...

வாக்களித்துள்ளனர். குற்றவியல் திருத்தச் சட்டத்திற்கு எதிராக 33 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. இதன்படி, 77 மேலதிக வாக்குகளினால் இந்தத் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, குறித்த சட்டத் திருத்தம் அமுல்படுத்தப்படுவதனால் பாதக விளைவுகள் ஏற்படும் என எதிர்க்கட்சிகளும் மனித உரிமை அமைப்புக்களும் அச்சம் வெளியிட்டுள்ளன.

## மாணவர்கள்...

செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார். தடுத்து வைக்கப்பட்ட இம் மாணவர்கள் ஒன்றரை மாதங்களாக அங்கு புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டனர் என புனர்வாழ்வு ஆணையாளர் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், யாழ். பல்கலைக்ழகக முகாமைத்துவ பீடாதிபதி வேல்நம்பி ஆகியோரிடம் வவுனியாவில் வைத்து மாணவர்கள் கையளிக்கப்பட்டனர். கடந்த வருடம் நவம்பர் மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகள், ஆர்ப்பாட்டங்களையடுத்து, குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் இம்மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அதன் பின்னர் புனர்வாழ்வுக்காக வெலிகந்த புனர்வாழ்வு நிலையத்துக்கு மாற்றப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புனர்வாழ்வு...

பட்டுள்ள முன்னாள் போராளிகளின் பொருளாதாரத்திற்காகவும், சமூகத்தில் ஏற்படக்கூடிய அன்றாடப் பிரச்சினை, அவர்களின் நலன்புரி விடயங்கள் மற்றும் கடன் உதவிகள் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் இன்னோரன்ன உதவியை அவர்களுக்கு வழங்கும் நோக்கோடு இந்த அலுவலகம் செயற்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பழிவாங்கும்...

உள்ளதாவது, கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமையானது பிரபஞ்சத்திற்கு உரித்துடையதென்பதுடன் அது இலங்கை சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படை உரிமையைப் பாதுகாத்து அனைத்து பிரஜைகளும் பழிவாங்குதலுக்கு உட்படும் அச்சமேதுமின்றி தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு உள்ள உரிமையை உறுதிப்படுத்துமாறும் இலங்கை அரசாங்கத்தை நாம் கோருகின்றோம் என்றும் அந்த அறிககையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## அர்த்தமுள்ள...

இதன் பின்னர் புதுடெல்லியில் நேற்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித்துடன் இணைந்து செய்தியாளர்களை சந்தித்தனர்.

புதுடில்லியில் இன்று நடைபெற்ற 8 ஆவது கூட்டுக்குழுக் கூட்டத்தில் இந்தியாவும் இலங்கையும் இரட்டை வரிவிதிப்பை தவிர்த்தல், அனைத்துலக தீவிரவாதத்துக்கு எதிரான போர், போதைப் பொருள் தடுப்பு ஆகிய மூன்று உடன்பாடுகளில் கையெழுத்திட்டுள்ளன. அத்துடன் திருகோண மலையில் சிறப்பு பொருளாதார வலயத்தையும், மருந்துப் பொருள் மற்றும் ஆடைகள் கொத்தணியையும் இலங்கையில் நிறுவவும் இருநாடுகளும் திட்டமிட்டுள்ளன.

மீனவர்களுக்கு எதிராக வன்முறைகளைப் பிரயோகிப்பதில்லை என்றும் இந்தியாவும் இலங்கையும் இணக்கம் கண்டுள்ளன. இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள்கட்டுமானம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்து உதவவுள்ளது. அதேவேளை, நேற்றைய சந்திப்பின் போது, தமிழர் விவகாரம் குறித்துப் பேசப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சலமான் குர்சித் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இலங்கையில் தமிழ்ச்சமூகம் நீதியாகவும், கௌரவமாகவும், சமத்துவமாகவும், சுயமரியாதையுடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடர வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன்.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மீதிருந்தும், தேசிய நல்லிணக்கத்தின் மூலமும், அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஒன்று எட்டப்படும் என்று நாம் நம்புகிறோம். என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இதனிடையே, அடுத்த மூன்று ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகத்தை 10 பில்லியன் டொலராக உயர்த்தவும் நேற்றைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

# மக்கள் சேவையை மேம்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்

(ஆனைக்கோட்டை)

வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் இந்த வருடத்திற்கான செயற்பாடுகளை நாம் திறம்பட செயற்படுத்த வேண்டும். இதற்கு சபையினர் அனைவரும் இந்த யோசனையை ஒற்றுமையாக ஏற்றுக்கொண்டு செயற்பட முன்வாருங்கள் என ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளரும் வலி. தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினருமான ஜீவா தெரிவித்தார்.

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்குரிய முதலாவது கூட்டம் புதிய செயலாளர் ஜே. யோகேஸ்வரி தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த ஆண்டு மிகவும் சிறந்த முறையில் செயற்படவே "திவிநெகும" வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் வறுமையற்றவர்களைக கவனப்பதற்கென கிராம சேவகர் பிரிவுகள் ரீதியாக ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நாம் சபை உத்தியோகத்தர்களுடன் எவ்விதத்திலும் மனஸ்தாபப் படக்கூடாது. சபையைச் சரியான முறையில் செயற்பட ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர் செல்வராசா கூறுகையில் இங்கு நடக்கும் கூட்ட அறிக்கைகளைச் சரியான முறையில் தயாரித்து நமக்கென்று ஒரு அரசு இருக்கின்றது. அதற்கு இவை அனுப்பப்படவேண்டும்.

சபையில் ஆளணிப் பற்றாக் குறை இருந்தால் செயலாளர் உரிய இடத்திற்கு அறிவிக்க வேண்டும். அல்லது மேலதிக நேரம் வழங்க அனுதிக்க வேண்டும் என்றார். ஆளும் கட்சி உறுபபினர் மகேந்திரன் கூறுகையில், நாம் கட்சிபேதமற்ற முறையில் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றார். (104)

## சிறிதரன்...

அங்கு வருகை தந்திருந்ததாக சிறிதரன் எம்.பி. தெரிவித்தார். குறிப்பாக பொன்காந்தனால் வழங்கப்பட்ட வாக்குமூலம் ஒன்றின் அடிப்படையில் சிறிதரனதும், அலுவலகத்திலுள்ள ஏனைய மடிக்கணனிகளையும் சோதனை செய்வதற்காகவே தாங்கள் வருகை தந்துள்ள்தாக அவர்கள் தெரிவித்தாக சிறிதரன் தெரிவித்தார். எனினும் கடந்த தேடுதல்களின் போதும் தமக்கு தகவல் வழங்கப்படவில்லை எனவும் இம்முறையும் தான் அங்கு இல்லாத போது தனக்கு தகவல் வழங்கப்படவில்லை எனவும் இது தொடர்பில் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரிடமே தகவல் பெறப்பட வேண்டும் என அவர்கள் தெரிவித்ததாகவும் என்ன அடிப்படையில் தேடுதல் நடத்தப்பட்டது எனக் கோரப்பட்ட போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழேயே தாங்கள் தேடுதல் நடத்துவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர் எனவும் சிறிதரன் தெரிவித்தார்.

## சம்பந்தன்...

அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காலத்தின் தேவைக்கமைய தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈபி.ஆர்.எல்.எப், ரெலோ ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து ஐக்கியமாக செயற்படும் நோக்கத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த கட்சிகள் அனைத்தும் சம பலத்துடனேயே இணைந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாமையால் வேறு வழியின்றி தமிழரசு கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தேர்தல்களில் போட்டியிட்டனவே அன்றி அன்றைய நிலையில் தமிழரசுக் கடசிக்கு தனித்துவம் இருக்கவில்லை.

தமிழ் மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தனரே அன்றி தமிழரசுக் கட்சிக்கல்ல. இந்த அடிப்படையிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்படுமாறு மக்கள் அழுத்தம் கொடுத்தனர்.

சந்தர்ப்ப சூழ்நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமது சுயநோக்கத்திற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பில் வெற்றிபெற்ற கூட்டுக் கட்சிகளின் வேட்பாளர்களை தமிழரசு கட்சியில் இணைத்தமையை பொதுமக்கள் கண்டித்துள்ளனர். தமிழரசுக் கட்சியின் இத்தகைய போக்கை தடுத்து நிறுத்தாது அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் இரா. சம்பந்தன் தமிழரசுக் கட்சியை பலப்படுத்த வேண்டும் என விடுத்திருக்கும் கோரிக்கை அமைகிறது. இது தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. தாய் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகள் அனைத்தும் அதன் அங்கங்களேயாகும்.

சில சுயநலவாதிகள் குட்டையை குழப்பி பருந்துக்கு இரையாக்காது தடுக்க சம்பந்தன் செயற்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்படுவதற்காகவே தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் புளொட் ஆகியன முன்வந்ததேயொழிய தமிழரசுக் கட்சியில் இணைந்து செயற்படுவதற்காக அல்ல என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற ஓர் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்த வேண்டுமென்ற சம்பந்தனின் கோரிக்கைக்கு மக்கள் சார்பில் வரும் பதிலே இதுவாகும். 2004ஆம் ஆண்டுக்குப் பின் நடந்தேறிய அத்தனை தேர்தல்களிலும் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களித்துள்ளனர் என்பதே நிதர்சனமான உண்மையாகும் என்றார்.

# சட்டத்திருத்தத்தை எதிர்த்து தெற்கில் வெடித்தது போராட்டம்




(கொழும்பு)

சந்தேக நபர் ஒருவரை நீதிமன்றத்தின் உத்தரவின்றி பொலிஸார் 48 மணி நேரம் தடுத்து வைக்கும் வகையிலான புதிய சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த சட்டமூலத்தின் இராண்டாம் வாசிப்பே நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. முன்னிலை சோஷலிச கட்சியினர் உட்பட பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

பிடியாணையின்றி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவரை 48 மணித்தியாலங்கள் தடுத்துவைப்பதற்காக 15 வகையான தவறுகள் இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தச் சட்ட மூலம் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் முன்னிலை சோஷலிச கட்சியினரால் நேற்று முன்தினம் கொழும்பு, கோட்டை பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

# இஸ்லாமியப் போட்டி பரிசளிப்பு விழா

பிளவ்ஸ் ஹாஜியார் பவுண்டேஷன் யாழ். மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்துடன் இணைந்து நடத்திய ஹிஜிரி 1434 முஹர்ரம் இஸ்லாமிய போட்டியின் பரிசளிப்பு விழாவும் ஊடக விருது வழங்கலும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். ஒஸ்மானியா கல்லூரி மண்டபத்தில் அதிபர் அபிஷேக் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும், சிறப்பு அதிதிகளாக UR பிரன்ட்ஸ் பவுண்டேஷன் தலைவர் கே.செவ்வேள், பி.ஈஸ்வரராசா (யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர்), யாழ். பிரதி மேயர் சட்டத்தரணி எம்.எம்.ரமீஸ், எம்.சி.எம். முகம்மது ஜிப்றி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், 512 பிரிகேடியர் கொமாண்டர் கேணல் ஏ.பி.பல்லேகெல ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் அஹதிய்யா மாணவர்களுக்கும் திறந்த போட்டியான கவிதை, கட்டுரையாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும். விசேட நிகழ்வாக ஊடகவியலாளர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்படவிருக்கின்றனர். (105)

# மோசடி முகவர் நிலையம் முற்றுகை

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் விநியோகிக்கப்படும் பதிவு முத்திரைகளுக்கு சமனான போலி முத்திரைகளை ஒட்டி சில பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதற்கு முயற்சித்த முகவர் நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - மருதானை பிரதேசத்தில் உள்ள முகவர் நிலையம் ஒன்றின் உப முகவர் ஒருவரினாலேயே இந்த முறைகேடான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணியாளர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் போது பயண அனுமதிச் சீட்டுகளை சட்ட ரீதியாக்குவதற்காக இந்த முத்திரைகள் பயன்படுத்தப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த முகவரால் தயாரிக்கப்பட்ட முத்திரைகள் இடப்பட்ட வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் இரண்டுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட போலி முகவர் நேற்று நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# நீதி நிர்வாகத்திற்கு அழிவுகாலம் ஆரம்பம்

**- ஐ.தே.க. சீற்றம் -**



நாட்டின் கல்வி, சுகாதாரம், நீதிமன்றம், பொலிஸ், நிர்வாகம் என்பன இந்த அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் அழிவடைந்துவிடும் என தென் மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் மைத்திரி குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஹபராதுவ கட்சிக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுகாதாரத்துறையை அபிவிருத்தி செய்ய அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவால் முடியாது எனவும் அவர் பதவியை பாதுகாத்துக் கொள்ள மாத்திரமே முனைவதாகவும் மைத்திரி குறிப்பிட்டார். என்றும் இல்லாதவாறு பலபிட்டி வைத்தியசாலையில் தாயும் சேயும் உயிரிழந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் கல்வித்துறை வீழ்ச்சிக்கு ஜே.வி.பி. காரணம் என உயர்கல்வி அமைச்சர் குற்றம் சுமத்தும் அதேவேளை, ஜே.வி.பி. முன்னிலை சோஷலிச கட்சி மீது குற்றம் சுமத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இவை அனைத்துக்கும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவே பொறுப்புக்கூற வேண்டும் என மைத்திரி குணரத்ன தெரிவித்தார்.

நீதிமன்ற தீர்ப்பை இந்த அரசாங்கம் மீறியுள்ளதாகவும் அதனால் நாட்டின் உண்மையான பிரதம நீதியரசர் ஷிராணி ப[illegible]டாரநாயக்கவே எனவும் அ[illegible] சுட்டிக்காட்டினார்.

# மக்களின் தேவைகள் நேரடிப் பகுப்பாய்வு

(காரைநகர்)

காரைநகர் நெய்தல் கிராமத்தில் மீள்குடியேறிய மக்களுக்கான தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடலொன்று ஈ.பி.டி.பியின் காரைநகர் பிரதேச இணைப்பாளரும், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வீ.கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

காரைநகர் நெய்தல் கிராம மைதானத்தில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் அப்பகுதியில் மீள்குடியேறிய மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அப்பகுதி மக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய தீர்வினைப் பெற்றுத் த[illegible]வதாகத் தெரிவித்தார். இதில் கிராம அலுவலர் திருப்புகலூர்சிங்கம் உடனிருந்தார்.

# ஆயுதங்கள் மீட்பு

திருக்கோவில், தம்பட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றின் முற்றத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் உரிமையாளர் முற்றத்தை துப்பரவு செய்து கொண்டிருந்தபோது, நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கண்டுள்ளார். உடனே பொலிஸாருக்குத் தகவல் கொடுததையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் ரி-56 ரக துப்பாக்கி, 3 மகசீன்கள், 50 ரவைகள் ஆகியவற்றை மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீட்டு உரிமையாளர்கள் சுனாமி அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து, 2 வருடங்களுக்கு முன்னரே அவ்வீட்டில் குடியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## விசாரணைப் பிரிவு மீது கண்டனம்

சுகாதார அமைச்சின் விசாரணை பிரிவில், மருத்துவம் தொடர்பான அனுபவமற்ற அதிகாரிகளே இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் நவீந்த சொய்சா இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக, மருத்துவர்களினால் ஏற்படும் தவறுகள் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எழுத்தாளர்களை ஊக்குவிக்க நூல்கள் கொள்வனவு

(வவுனியா)

எழுத்தாளர் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்யும் கலாசார அலுவல்கள் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

கலாசார அலுவல்கள் திணைக்களம் தமது எழுத்தாளர் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் பிரதேச செயலாளர் பிரிவு தோறும் வசித்து வரும் எழுத்தாளர்களிடம் 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வெளி வந்த நூல்களில் தகுதியான சிலவற்றை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் மேற்படி நூல் கொள்வனவிற்கு விண்ப்பிக்க விரும்புபவர்கள் 24.1 ஆம் திகதிக்கு முன்னர் தமது நூல்களுடன் பிரதேச செயலகத்தில் விண்ணப்ப படிவத்தினை பெற்று ஒப்படைக்கும் பட்சத்தில் அதனை கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒன்றிற்கு மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டிருப்பின் அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான விண்ணப்பப் படிவங்கள் இணைக்கப்படவேண்டும் என்பதுடன் பாடப்புத்தகங்கள், தொகுப்பு நூல்கள், வார வெளியீடுகள் மற்றும் மாதிரி வினா விடைப் புத்தகங் கள் கொள்வனவு செய்யப்படமாட்டாது எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (160)

## வாழைச்செய்கை அமோகம்

வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை போதனாசிரியர் பிரிவில் தூவல் நீர்ப்பாசனம் மூலமாக வாழைத்தோட்டச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். ஜி.ஐ.ரி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் வவுனியா மாவட்ட விவசாய விரிவாக்கற்பிரிவு மேற்கொண்டு வரும் இத்திட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு இவ்வாறு தூவல் நீர்ப்பாசனத்தின் மூலமான வாழைத்தோட்டச் செய்கைக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. (160)

## மரண அறிவித்தல்

### துரைச்சாமி ஜெயரட்ணம்

**(ஆயுர்வேத வைத்தியர்)**



பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **துரைச்சாமி ஜெயரட்ணம்** 21.01.2013 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி துரைரட்ணம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், கனகாம்பிகை, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயரட்ணம் நாகேஸ்வரி (பிரதேச சபை, சுன்னாகம்) யின் அன்புக் கணவரும், சூரியகுமார் (பிரதேச சபை, கரைச்சி, கிளிநொச்சி) அவர்களின் மாமனாரும், கார்த்திகா, துவாரகா (வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி) ஆகியோரின் சித்தப்பாவும், திருமதி ஈஸ்வரிதேவியின் மைத்துனரும், பிரதீபன், தீட்சனா ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**நாகேஸ்வரி (மனைவி) பிரதேச சபை, சுன்னாகம்.**

**இராமலிங்கம் சூரியகுமார் (மருமகன்)**

(R/094) **சாரதி, கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.